Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

கண்ணோட்டம் KANNOTTAM

வெளியீடு-37 15 சித்திரை APRIL 2007 விலை:- 10.00

எந்த
மபெரும்
காரியத்தை
புரிவதற்கும்
அளவு கடந்த
ஆர்வ எழுச்சி
தேவை.

சேகுவேரா

# இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான திட்ட முன்மொழிவு

## முன்னுரை

## ஈ.பி.ஆர்.எல்.எவ்- பத்மநாபா

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் தொடர்ந்து இழுத்தடிக்கப்படுவதால் நாடு முழுவதுவும் யுத்த நெருக்கடியிலேயே காலத்தைப் போக்குகின்றது....... ஒரு தேசம் முற்றாகச் சீரழிக்கப்பட்டுள்ளது....... ஒரு இனம் சின்னாபின்னமாக சிதைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களில் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்டோர் தமது சொந்த தேசத்திலேயே இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக கையேந்தி வாழும் அகதிகளாக - மானிட மிருகங்களாக உயிர்வாழ வைக்கப் பட்டிருக்கின்றார்கள். பத்து லட்சத்துக்கு மேற்பட்டோர் மேலைத்தேய நாடுகளிலும் இந்தியாவிலும் அகதிகள் என்ற பட்டத்துடன் அந்நிய நாடுகளின் அநுதாபத்தில் வாழ நிர்ப்பந்திப்பபட்டுள்ளார்கள்.

யுத்தத்தால் கொல்லப்பட்டவர்கள் கணக்கு எழுபதாயிரம் தான் அதைவிடப் பத்து மடங்கு அதிகமானோர் எந்த நேரமும் கொல்லப்படலாம் என்னும் வகையாக யுத்தப் பிரபுக்களின் துப்பாக்கிக் குழல்களின் முன்னால் சாவுப்பயத்துடன் இருக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஜனநாயகம் சிறிதும் இல்லாமல், அடிப்படை மனித உரிமைகள் எதுவுமற்றவர்களாக - ஒவ்வொரு நிமிடமும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு - துப்பாக்கி ஏந்தியவர்களின் தலையாட்டி பொம்மைகளாக, நடமாடும் மானிடப் பிண்டங்களாக உயிர் வாழ மட்டுமே இலங்கையின் வடக்கு - கிழக்கில் தமிழர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். நேற்று, இன்றைக்கு மேலும் நாளை சில மாதங்கள் அல்லது ஓரிரு வருடங்களுக்கு மட்டுந்தான் இந்த அவல நிலையென்றால் கூட மக்கள் நம்பிக்கையோடு, எதிர்பார்ப்போடு அழிவுகளையும் இன்னல்களையும் தாங்கிக் கொள்வார்கள். ஆனால், என்றைக்கு இந்தப்பிரச்சினைக்குத் தீர்வு வரும் என யாராலும் கூற முடியாத அளவுக்கு இந்த யுத்தப் பிரளயம் தொடர்கிறது.

இந்த மோசமான நிலைமைகளுக்குப் பின்னால் பல அம்சங்களை உள்ளடக்கிய ஓர் அரசியற் பிரச்சினை இருப்பதை பகுத்தறிவுடைய அனைவரும் அறிவர். அதற்கு முழுமையானதோர் தீர்வு காணப்பட வேண்டுமென்பதை அனைத்து அரசியற் தலைவர்களும் ஒப்புக் கொண்டுமுள்ளனர். ஆனால், 1957ம் ஆண்டின் பண்டாரநாயக்கா –செல்வநாயகம் ஒப்பந்தத்தை ஆரம்பமாகக் கொண்டு பார்த்தாலும் கூட அதற்கான முயற்சிகளும் 50 ஆண்டுகளை அடைந்து விட்டன. காலம் கடத்தும் பேச்சு வார்த்தைகள், கைவிடப்பட்ட ஒப்பந்தங்கள், கைகூடாமற் போன அரசியல் யாப்பு திருத்த முயற்சிகள் என்பன பொன் விழாக் காணுகின்றன.

தொடர்ச்சி 02ம் பக்கம்

# ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா) கட்சியின் பிரதேச தலைவர்கள் இடம்பெயர்ந்த மக்களின் அவலநிலைக்கு பரிகாரம் காண முயற்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்களின் நலன்புரிநிலையங்களை ஈபிஆர்எல்எவ் (பத்மநாபா) கட்சியின் பிரதேச தலைவர்கள், தோழர்கள் அடங்கிய குழுவினர் சென்று பார்வையிட்டனர். தோழர்கள் பத்மநாதன், சுரேந்திரன், மதன், மோகன், பெனாண்டோ ஆகியோர் இந்த குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

மஞ்சந்தொடுவாய் நலன்புரிநிலையம இங்கு மூதூர் தெற்கு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த 121குடும்பங்களைச் சேர்ந்த 490 அங்கத்தவர்கள் தங்கியுள்ளனர்.



நாவற்குடா கலாச்சார மண்டபம் இங்கு படுவான்கரை பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த 50 குடும்பங்களைச் சேர்ந்த 183 அங்கத்தவர்கள் தங்கியுள்ளனர்

மட்டக்களப்பு சிங்கள மகாவித்தியாலயம், மூதூர் கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த 108 குடும்பங்களைச் சேர்ந்த 387 அங்கத்தவர்கள் இங்கு தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நெல்சந்தைபடுத்தும் நிலையம் கள்ளியன்காடு இங்கு மூதூர் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த 251 குடும்பங்களைச் சேர்ந்த 879 அங்கத்தவர் தங்கியுள்ளனர்.

சாகிறாக்கல்லூரி கள்ளியன் காடு இங்கு சம்பூர் பகுதியி லிருந்து இடம்பெயர்ந்த 182 குடும்பங்களைச் சேர்ந்த 65 அங்கத்தவர்கள் தங்கியுள்ளனர்.

அன்னம்மாள் பாடசாலை வீச்சுக்கல்முனை இங்கு 104 குடும்பங் [illegible] அங்கத்தவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.



புத்தாண்டு வேளையில் தமது பிள்ளைகளுக்கு உடுபுடவைகளைக்கூட வாங்கிக் கொடுக்க முடியவில்லை என இடம்பெயர்ந்த பெற்றோர் தமது கவலையை வெளியிட்டனர். மழை வெள்ளம், கூடாரங்கள் மழைக்கு தாக்குப்பிடிக்காமை, மலசல கூடங்கள் பயன்படுத்தப்பட, பராமரிக்கப்பட இயலாத நிலை, குழந்தைகளுக்கு பால்மா இல்லை. உலர் உணவு பற்றாக்குறை, போன்ற தாம் எதிர்நோக்கி யுள்ள பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் தோழர்களிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

இந்த மக்கள் தெரிவித்த குறைபாடுகள், பிரச்சைனைகள் தொடர்பாக தோழர் இரா துரைரெத்தினம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்



## ஆக்கபூர்வமான சிந்தனையும் சிந்தனையும் செயற்பாடும்.

தமிழ் மக்களின் பிரச்சனை கண்டங்கள் தாண்டி, சமுத்திரங்கள் தாண்டி உலகளாவியளவில் அவதானத்துக்குரியதாக மாறியிருப்பது போலவே தமிழ் மக்களுடைய வாழ்க்கையும் பல அனர்த்தங்களை அழிவுகளை இழப்புக்களை தாண்டி இன்று வீதியில் நிராதரவாக நிற்கும் நிலையை வந்தடைந்துள்ளது. இதற்கு மேலும் இனப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணுவதில் அக்கறையில்லாத தமிழ் தலைமைகள் இருக்குமானால் அவை அப்பட்டமான சுயநலத்தைத் தவிர வேறொன்றையும் கொண்டிருக்கவில்லை என்றே அர்த்தமாகும்.

புலிகளும், புலிகளின் முகவர் அமைப்பான தமிழ் கூட்டமைப்பும் தமிழ் மக்களின் அழிவுகளின் மீது அரசியல் நடத்துவதை நாம் நாளாந்தம் செயலிலும் பேச்சிலும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

கடந்த மூன்று தசாப்தங்களாக தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களைவிட்டு இடம் பெயர நிர்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். வடக்கு கிழக்கு வாழ் முஸ்லீம் மக்களின் நிலைமையும் இதற்கு விதிவிலக்கல்ல.

இரண்டு தலைமுறை காலத்தில் இவ்வாறு மக்கள் துன்பங்களை அனுபவித்துக் கொண்டு வாழ்கிறார்கள். தற்போதுள்ள மக்களின் வாழ்க்கைநிலை எல்லை மீறிப் போன ஒரு மாபெரும் மனிதாபிமான நெருக்கடியாகும். உயிர், பொருளாதார இழப்பு, உடல் நலிவு, உள பாதிப்புக்கள் அத்தனையும் வடக்கு கிழக்கில் வாழும் பெரும்பான்மையான மக்கள் மீது கவிந்து கிடக்கின்றன.

இனிமேலும் தாமதிக்க முடியாது என்றவொரு கட்டத்தை, நிலையை எமது மக்கள் அடைந்துள்ளனர். சூடானின் டாபர் பிராந்தியம் போன்ற பட்டினியும் வன்முறையும் கட்டற்று போன நிலையை நாம் அனுமதிக்க முடியாது.

தமிழ் தலைமைகள் பொறுப்புணர்வுடனும், தீர்க்க தரிசனத்துடனும் செயற்பட வேண்டிய காலமிது. நிரந்தர தீர்வை நோக்கிய செயற்பாடே தமிழ் மக்களின் கட்டற்ற பேரழிவு நோக்கிய இந்த நரகப் பயணத்தை திசை திருப்ப முடியும். பிரிவினைவாத சக்திகள்- யுத்த வெறியர்கள் இந்த நரக பாதையையே மக்களுக்கு ஒரே தேர்வாக தக்கவைக்க முயல்கின்றார்கள்.

இலங்கையில் தேசிய இனப்பிரச்சனை என்பது கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக இரண்டாந்தர பிரஜைகளாக இந்த நாட்டில் வாழ்கிறோம் என்று கருதும் நடைமுறை அனுபவத்தைக் கொண்டிருக்கும் பிரதானமாக தமிழ் மக்களதும், முஸ்லீம் மக்களினதும் பிரச்சனையாகும்.

அரசியல் யாப்பில் தீவிர மாற்றங்களுக்கு உட்படுத்துவதன் ஊடாக இன ரீதியான பாரபட்சங்களை முடிவுக்குக் கொண்டுவருவது இனி மேலும் தாமதிக்க முடியாதது.

ஜனாதிபதி அவர்களால் அமைக்கப்பட்ட அனைத்துப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண அவர்கள் முன்வைத்துள்ள தீர்வு யோசனைகளில் இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையகம் என நான்கு பிரதான சமூகத்தவர்கள் இருப்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே ஜனாதிபதி அவர்களால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவில் பெரும்பான்மையினரும் தீர்வு ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர். இதில் இலங்கையின் சிங்கள, தமிழ், முஸ்லீம் சமூகங்களைச் சேர்ந்த கல்விமான்கள் இடம்பெற்றிருந்தமை முக்கியமான அம்சம்.

இவ்விரு ஆலோசனைகளும் ஆக்கபூர்வ பல அம்சங்களை கொண்டிருந்தன கணிசமான அளவில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை கருத்திற்கெடுத்தனவாக அமைகின்றன.

மலையகத்தில் இருந்தும் முஸ்லீம் அரசியல் கட்சிகளிடமிருந்தும் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன.

எனினும் வடக்கு கிழக்கில் இருந்து காத்திரமான அளவில் தமிழ் மக்களின் அரசியல் தலைமைகளிடமிருந்து ஆலோசனைகள் பெறப்பட்டு தீர்வை நோக்கிய பயணம் உறுதியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஆக்கபூர்வமாக சிந்திப்பதை விட்டு முரண்நிலை அரசியல் செய்வது ஒரு போதையாகவும் எமது சமூகத்தில் போய்விட்டது. ஏனெனில் இது இலகுவானது. தீர்வு பற்றி விரிவாக சிந்திக்கவோ செயற்படவோ தேவையில்லை. மேம்போக்காக நிராகரித்துக் கொண்டிருக்கலாம். இத்தகையவொரு அரசியல் தமிழ் மக்கள் மத்தியில் பல தசாப்தங்கள் நிலவி வந்திருக்கிறது. அதுவும் தமிழ் மக்களின் இன்றைய பேரழிவுகளுக்கு பங்களித்திருக்கிறது.

எனவே ஆக்கபூர்வமான தமிழ் மக்களின் வாழ்வில் விடியலை ஏற்படுத்தக் கூடிய ஆழமான சிந்தனையும் செயற்பாடும் இன்று மிக மிக அவசியம்.

# இலங்கையின் இனப்பிரச......

இலங்கையின் ஜனாதிபதிகள் அடுத்தடுதது வாக்குறுதிகளை அளித்து வந்திருக்கிறார்கள், இந்தியா நேரடியாகத் தலையிட்டு தன் நாட்டுப் போர்வீரர்கள் 2000 பேரைப் பலி கொடுத்து இலங்கையில் சமாதானத்தை உருவாக்க முயற்சித்தது. உலகின் பிரதானமான நாடுகளெல்லாம் திரண்டு வந்து சமாதானத்துக்காக முயற்சித்தன. ஆனால் எதுவும் சமாதான நோக்கங்களைச் சாதிக்கவில்லை.

யுத்த வெறிபிடித்தவர்கள் தமிழ்ச் சமூகத்திலிருந்து – உருவாகிய ஆக்கபூர்வமான ஆற்றல் மிக்க தலைவர்கள், சமூகப் பிரதிநிதிகளையெல்லாம் அழித்துவிட்டனர். அரசியல் ரீதியில் தமிழ்ச சமூகமே தலையற்ற முண்டமாக்கப் பட்டுள்ளது. பரந்து பட்ட தமிழ்ப் பொதுமக்கள் பிரிவினையை நம்பியிருக்கவில்லை என்பதை புலிகள் உட்பட அனைவரும் அறிவர். பிரிவினை வெறிபிடித்தவர்களின் கொலையாற்றலின் பிரமாண்டத்தின் மத்தியிலும் மிகப் பெரும்பான்மையான தமிழர்கள் ஒரு தர்ம நியாயமான – நவீன உலகின் அரசியல் நீதி அளவு கோல்களுக்கு ஒத்ததான ஓர் அரசியற் தீர்வைத்தான் வேண்டி நிற்கின்றார்கள் என்பது பொதுவாக அறியக் கூடிய – அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒன்றே.

ஆனால், அப்படியானதொரு தீர்வை நோக்கி விடயங்களை விரைவு படுத்தாமல் புலிகளின் யுத்த நடவடிக்கைகளையும் யுத்த ஆற்றலையும் காரணம் காட்டி தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் நீதியை வழங்குவதில் காலம் தாழ்த்துவது இலங்கை அரசினதும் குறிப்பாக சிங்களத் தலைவர்களினதும், சர்வதேச சமூகத்தினதும் தவறே.

மிகவும் சிக்கலாக வேருன்றிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமானால் :—

1) பிரச்சினையின் தொடக்கம் வளர்ச்சி பற்றி வரலாற்று ரீதியான உண்மையான மீளாய்வும் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்கமாக அடையாளம் காணுதலும் வேண்டும்,

2) அப்பிரச்சினைகளுக்கு முழுமையானதொரு அரசியற் தீர்வை ஏற்படுத்தும் வகையாக நேர்மையானதும் நியாயமானவையுமான அரசியல் இலக்குகள் வேண்டும்,

3) சிங்கள மக்கள் மத்தியில் ஏழு சதவீத ஆதரவைக் கூட பெற்றிராத சிங்கள இனவாத தீவிரவாதத்தையும், நியாயமானதொரு அரசியற் தீர்வு மூலம் தோற்கடிக்கப்படக் கூடிய வடக்கு-கிழக்கு பிரிவினை வாதத்தையும் பொருட்படுத்தாமல் சரியானதை, நீதியானதை நிலைநாட்டும் அஞ்சாமையும் தீர்மானகரமான முன்முயற்சிகளும் வேணடும்.

01ம் பக்கத் தொடர்ச்சி

இனப்பிரச்சினையின் உள்ளடக்கங்களைக் கண்டறிவதற்கும் அவற்றுக்கான தீர்வுகளை அடையாளம் காண்பதற்கும் பின்வருவனவற்றை புரிந்து கொள்வது அவசியமாகும் :—

1. பாராளுமன்றவாத தமிழ்த் தலைவர்களான சேர். பொன். அருணாசலம், திரு.ஜி.ஜி. பொன்னம்பலம், திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம், மற்றும் திரு.அ. அமிர்தலிங்கம் போன்றோர் சுமார் 60 ஆண்டுகளாக எழுப்பிய பிரச்சினைகள் மற்றும் முன்வைத்த பிரேரணைகள்,

2. பண்டா - செல்வா ஒப்பந்தத்தின போது திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவும், டட்லி - செல்வா ஒப்பந்தத்தின் போது 1965ல் திரு. டட்லி சேனநாயக்காவும், 1977 பொதுத் தேர்தல் அறிக்கையில் திரு ஜே.ஆர். ஜெவர்த்தனாவும், 1988 ஜனாதிபதித் தேர்தல் அறிக்கையில் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் தமிழர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதிகளை அங்கீகரித்து அவை தொடர்பாக அவர்கள் பகிரங்கமாக ஒப்புக்கொண்டவைகள்.

3. 1960க்கும் 1977க்கும் இடைப்பட்ட காலத்தைத் தவிர இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் தொடக்கம் இன்று வரை லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் இனப்பிரச்சினை தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் மற்றும் கட்சித் தீர்மானங்கள்.

4. 1983க்கும் 1987க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவின் ஈடுபாட்டுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் மற்றும் ஏற்கப்பட்ட தீர்மானங்கள்.

5. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமையிலான மாகாண அரசு ஆட்சிக் காலத்தில் வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் முன்வைக்கப்பட்ட மாற்றுத்திட்டங்கள் மற்றும் 19 அம்சக் கோரிக்கைகள்,

6. திரு. மங்கள முனசிங்காவின் தலைமையில் அமைக்கப்பட்ட பாராளுமன்றக் கமிட்டியின் முன்னால் தமிழர் தரப்பிலும் மற்றும் திரு. மங்கள முனசிங்காவினாலும் முன்வைக்கப்பட்ட சிபார்சுகள்,

7. திருமதி சந்திரிகாவினால் 1995ல முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் மற்றும் 1997 ஆண்டில் அவரின் தலைமையில் தயாரிக்கப்பட்ட புதிய அரசியல் யாப்புக்கான சட்ட வடிவங்கள் மேலும அவை தொடர்பாக தமிழர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட மாற்றுக் கருத்துக்கள். ஆகியவை ஒரு சரியான நியாயமான அரசியற் தீர்வுக்கான பிரேரணைகளைத் தீர்மானிப்பதற்கு அவசியமான அடிப்படை ஆவணங்களாகும்.

மாறாக இன்று மேலெழுந்தவாரியாகத் தெரியும் பிரச்சினைகளை மட்டும் அவரவர் தத்தம் விருப்பத்திற்கேற்றவாறாகச் சுட்டிக்காட்டி சுருக்கமான முறையிலும் குறுக்கான வழிகளிலும் தீர்வுகாண முற்படுவதுவும் அரசியற் தீர்வை நோக்கிய இலக்குகளுக்கு விடயங்களை நகர்த்தமாட்டா என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு சில அரசியற் தலைவர்களும் ஆய்வாளர்களும் யுத்தத்தினால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பரிதாப நிலைகளை பல பரிமாணங்களில் படம் பிடித்து அவற்றை உயர்த்திக் காட்டி "இன்று மக்களுக்கு அரசியற் தீர்வு எவ்வாறு இருக்க வேண்டுமென்பதில் அக்கறையில்லை. அவர்களுக்கு வேணடியதெல்லாம் யுத்தமற்ற ஒரு சமாதானமே" என முடிவு செய்து பிரகடனம் செய்கின்றனர். இவ்வாறு பிரகடனம் செய்வோர் ஒவ்வொருவரும் தத்தமக்கென ஒரு நோக்கோடு உள்ளனர்.

புலி ஆதரவாளர்கள். சிங்கள பேரினவாதிகள், விடயங்களை நுனிப்புல் மேய்வது போன்று புரிந்து கொள்ளும் பரிதாபத்துக்குரிய அவசரக்காரர்கள், அரசியற் தீர்வு முயற்சிகளில் விரக்தி கொண்டோர், தொண்டர் நிறுவனத் தொழில் முயற்சியாளர்கள் எனப் பல வகையினர் இவ்வகையாக அரசியற் தீர்வு பிரதானமில்லை அல்லது எந்த அரசியற் தீர்வானாலும் இப்போதைக்குப் பரவாயில்லை என வாதிடுகின்றனர்.

யுத்தப்பிரபுக்களின் வசதிக்கான யுத்த நிறுத்தம் மீண்டும் மிக மோசமான யுத்த அழிவுகளுக்கே வழிவகுத்தமையே அனுபவம். மக்களின் அடிப்படை அபிலாஷைகளை, மக்களின் மிகக் குறைந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியாத அரசியற் தீர்வு சமாதானத்தை நிரந்தரமாக்காது. அது மீண்டும் பிரிவினைவாதிகளையே மக்கள் மத்தியில் செல்வாக்குள்ளவர்களாக ஆக்கும்.

அரைகுறையான அரசியற் தீர்வினை நியாயமான நேர்மையான அரசியற் சக்திகள் எத்தனை காலம் தலையாட்டி ஏற்று நிற்பார்கள். அல்லது அரைகுறை நிலையிலிருந்து முன்னேற்றத்தை நோக்கி நகர்த்த அப்போது மட்டும் சிங்கள பேரினவாதிகள் விட்டுக் கொடுத்து செயற்படுவார்கள் என்பது எப்படி நடக்கும். புலிகளின் பாசிசம் ஒழிந்தால் சரி! புலிகள் ஒழிந்தால் தான் தமிழர்கள் மத்தியிலுள்ள ஜனநாயக சக்திகளின் குரல் இந்த உலகத்துக்குக் கேட்கும், தமிழர்களின் நியாயமான போராட்டம் சரியான முறையில் முன்னேறும், இயங்கும் தன்மையைப் பெறும் என்பது வாதமாக இருந்தால் நாம் இப்போதைக்கு பிழையான அல்லது அரைகுறையான அரசியல் தீர்வுக்கு முண்டு கொடுத்து நிற்க வேண்டியதில்லை.

தொடரும்........

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**
**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**


**E.P.I.C., Box No: 0362**
**71603 Ludwigsburg,**
**Germany.**

**B.M. Box No: 1738**
**London - Wcix - 3nn,**
**U.k.**

**P - Fach No: 506**
**Bern - 17,**
**Switzerland.**

**E.P.I.C., Box No: 95**
**95144 Garges Les,**
**Gonnesse Cedex,**
**France.**

**P - Box No: 7183**
**Arumpakkam,**
**Chennai - 106,**
**India.**

**310 ஆஸ்பத்திரி வீதி**
**யாழ்ப்பாணம்.**
**☎ 021 2222022**

**29 ஏ, வாவிக்கரை வீதி**
**மட்டக்களப்பு.**
**☎ 065 2225179**

**No: 159, கடல்முக வீதி**
**திருகோணமலை.**
**☎ 026 2227118**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு என்ன வேண்டும் என்பதை தமிழர்கள் யதார்த்தமாகவே சொல்ல வேண்டும்

இனப்பிரச்சனை தீர்வுதொடர்பான தமிழர்களின் அக்கறையீனமும் அலட்சியமுமே பேரினவாதிகளுக்கும் புலிகளுக்கும் வசதியாய் அமைந்து விடுகிறது. இவர்கள சுடுகிறார்கள் அவர்கள ஆட்களைக் கடத்துகிறார்கள். பிள்ளைகளை பிடித்துச் செல்கிறார்கள். உணவையும், மருந்தையும் மறுக்கிறார்கள். விமானக்குண்டு வீச்சில் ஈடுபடுகிறார்கள். பூசாவில் எம் உறவுகளை அடைத்து எம்மை அலைக்கழிய வைத்திருக்கிறார்கள். கிளிநொச்சியில் எம் பிள்ளைகள் நடமாட முடியாது. திருமணமோ வேறு எந்த நற்காரியங்களோ நிகழமுடியாது. எமது நடமாடும் சுதந்திரம் மறுக்கபட்டிருகிறது. யாரையாவது பிணை வைக்கவேண்டும்.

இப்படியாக நாம் செத்துக்கொண்டும் வாழ்ந்துகொண்டும் அங்கலாயத்துக் கொண்டும் இருக்கிறோம்.

ஆனால் 25 வருடங்களுக்கு மேலாகத் தொடரும் இத்தகைய அவலங்களுக்கு எல்லைதான் எது? தீர்வுதான் எது? என்பது பற்றி எப்போதும் சிந்திப்பது கிடையாது. எப்போதும் நாம் கஸ்டப்படுகிறோம்! துன்பப்படுகிறோம்!! என்று அரற்றுவதே எமது பிழைப்பாய்போயிற்று. எமது அவல நிலைக்கு முடிவுகாண அரும்பாடுபட்ட தமிழ்த்தலைவர்கள் கொன்றொழிக்கபட்டார்கள். இது பற்றி நாம் எப்போதாவது அலட்டிக் கொண்டோமா? 1987 இல் இனப்பிரச்சனை தீர்விற்கான ஒரு வரைவை உருவாக்கி இலங்கை அரசையும் ஒப்புக்கொள்ளச் செய்து அதனை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கான இந்தியாவின் முயற்சியை அலட்சியம் செய்தோம்.

அந்த மாபெரும் உறவிற்கு பங்கம் ஏற்படும் விதமாகவும் தமிழ் மக்களின் நலன்களைக் காட்டிக்கொடுக்கும் விதமாகவும் புலிகள்- வன்முறைகளில் சண்டைகளில் ஈடுபட்டார்கள். இக்கால கட்டத்தில இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலமைந்த மாகாண அரசாங்கமும் உதாசீனப்படுத்தப்பட்டது. பிரேமதாசவின் அரசாங்கம அந்த மாகாண அரசைக் கலைத்து அதிகாரங்களைப் பறித்தெடுத்துக் கொண்டது பற்றிக்கூட எம்மவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் சமஷ்டிமுறை தீர்வு பிரஸ்தாபிக்கபட்டபோதும், நீலன் திருச்செல்வம் போன்ற கல்வியாளர்களும் கரிசனை செலுத்தி செயற்பட்டபோது கூட அலட்டிக்கொள்ளவில்லை. நீலனை புலிகள் தற்கொலை குண்டுதாரியை வைத்து கொலை செய்தபோது அலட்டிக்கொள்ளவில்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் அதிகாரப் பகிர்விற்கான அக்கறையைச் செலுத்தியதற்காக இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டபோதும் தமிழர்கள் அலட்டிக்கொள்ளவில்லை.

வல்வெட்டித்துறை கள்ளக்கடத்தல்காரர்களும் அவர்களின் அடியாட்களும் ஏதாவது பெற்றுத்தருவார்கள் என்ற நம்பிக்கையில் வாழாவிருந்தார்கள்.

ஒஸ்லோவில் சமஸ்டி முறையிலான தீர்வு பற்றி பிரஸ்தாபிக்கபட்டிருந்து அதுவும் ஆர்வமூட்டவில்லை.

தற்போது ஜனாதிபதி நியமித்த நிபுணர்குழுவினூடாகவும், பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் பெரும்பான்மையின் சாரம்சமான பேராசிரியா திஸ்ஸ விதாரண அவர்களின் இனப்பிரச்சனை தீர்வு யோசனைகளும் ஆர்வமூட்டவில்லை.

அதற்காக எம்மவர்கள் தமிழீழம் என்றுமில்லை. ஆக இந்த நிச்சயமில்லாத சூழ்நிலை மீது விரக்தியையும் அவநம்பிக்கையையும் வெளிப்படுத்தி வாழ்ந்து முடிப்பதென்ற போக்கே இந்த காலம் பூராகவும் காணப்படுகிறது.

தீர்வுபற்றி எந்த விழிப்புணர்வும் இல்லை. எமது இந்த சமூகக் குணம் தான் எம்மை நடுத்தெருவிற்கு கொண்டு வந்திருக்கிறது. ஒரு பாசிச சத்தி தலையெடுப்பதற்கு வழி வகுத்திருக்கிறது. மற்றவர்கள் எல்லாம் ஏறி மிதிப்பதற்கும் வழி வகுத்திருக்கிறது. மொத்தத்தில் இன்றைய மானிடப் பேரவலத்திற்கு வழிவகுத்திருக்கிறது. தமது சொந்த சுய பிரக்ஞையில் தமக்கு எத்தகைய தீர்வு வேண்டும் என்பதை சொல்லத் தெரியாத ஊமைச்சமூகமாக அல்லது தமது ஜீவாதார நலன்களுடன் விளையாடும் மனம்பேதலித்த சமூகமாக தமிழ் சமூகம் இருக்கும் வரை சமூகப் பேரழிவென்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

சிங்கள பேரினவாதிகளைப் பொறுத்தவரை சிங்களவர்கள் தவிர்ந்த இலங்கையின் ஏனைய தேசிய சமூகங்களுக்கு எதுவும் கொடுக்கக் கூடாது என்பதே. தமிழ்ப்பாசிச பயங்கரவாதத்தைப் பொறுத்தவரை தமது பயங்கரவாத கஜனாவும், வெடிமருந்து கிட்டங்கிகளையும் நிரப்புவதைத் தவிர வேறொன்றும் கிடையாது.

மட்டக்களப்பு வான்படை விமானத்தளத்தல் புலிகளின் செல் வீச்சில் காயமடைந்த இத்தாலியத் தூதுவரின் கருத்துக்கள் இங்கு கவனத்திற்குரியன. "நாமும் சாதாரண சிவிலியன்களின் அவலத்தை அனுபவிக்க நேர்ந்தது. மனிதாபிமானப் பணிகள் தொடர்பிலேயே அங்கு சென்றிருந்தோம். புலிகள் தெரிந்தே இராஜதந்திரகள் பயணம்செய்த விமானத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள். இந்த பிரச்சனை நீடித்துச்செல்லக் கூடாது. புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் எத்தகைய தீர்வையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. புலிகளில் கடுமையான நிலைப்பாடில்லாதவர்களை கண்டறிய வேண்டும். தமிழர்களின் பல தசாப்த துயரம் முடிவுக்கு வரவேண்டும்".

வெளியில் இருந்து பார்க்கும் மனிதருக்கு எமது சமூகத்தின் அவலம் வினோதமானதாகவும் அனாவசியமாக நீட்டிச் செல்லப்படுவதாகவும், அநியாயத்திற்கு உயிர்ப்பலி நிகழ்வதாகவும், புலிகளின் நிலைப்பாடு அறிவிற்கோ, யதார்த்தத்திற்கு பொருந்தாததாகவும் புலப்படுகிறது.

எனவே தமிழர்கள் தமது தலைவிதியை பற்றி தாம் சிந்திக்கத் தலைப்படவேண்டும். பல்வேறு அச்சுறுத்தல்கள் நிலவினாலும் எமக்கு எது வேண்டும் எது கூடாது என்பதை பகிரங்கமாக சொல்லத்தயாராக வேண்டும். தற்கொலை குண்டுதாரிகள்- சயனைட மாலைபோட்டவர்கள்- கொலை மனநோயாளர்களை புறக்கணித்து தமிழர்கள் தமகது என்னவேண்டும் என்பதைச்சொல்லத் தயாராக வேண்டும்.

**அகதித் தமிழன்**

# முரண்பாடு

சில நாட்களின் முன்னர் உதயன பத்திரிகையின் ஆசிரியத்தலையங்கம் ஒரு முக்கியமான விடயத்தை குறித்துரைத்திருக்கிறது. அது 2002 இல் புலிகளின் தலைவர் பிரபாகரனும் இலங்கையின் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் செய்து கொண்ட உடன்பாடு செல்லுபடியானதே என்று இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு பற்றியது.

நீதிமன்றம் இது அரசியல் ரீதியான விடயம் என்றும் இதில் தலையிட்டுத் தீர்ப்பளிக்க நீதிமன்றத்திற்கு அருகதையில்லையென்றும் தீர்ப்பளித்தது தொடர்பில் மிகச சரியாகவே இலங்கை- இந்திய ஒப்பந்தத்தினடிப்படையில் உருவாக்கபட்டு இணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்தை நீதிமன்ற நடவடிக்கையினூடாகப் பிரித்தமை என்பது ஒரு அரசியல் சார்ந்து மேற்கொள்ளபட்ட நடவடிக்கை மீதான அத்துமீறலா? புதிய தீர்ப்புடன் அது அடியோடு முரண்படுகிறதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. உண்மையில் ரணில்- பிரபா உடன்படிக்கை இந்திய இலங்கை ஒப்பந்தத்துடன் ஒப்பிட்டால் அத்தனை வலுவானதோ இலங்கையின் இனப்பிரசசனை தொடர்பான முக்கியமான அனைத்து விடயங்களையும் கணக்கில் எடுத்ததல்ல.

துரதிஸ்டவசமாக இலங்கையின இனமுரண்பாட்டு சிக்கலின் விளைவாக தேசியமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளில் தீர்ப்புக்கள் இலங்கையின் எந்த இனசமூகத்தை சேர்ந்தவர் பதவியில் இருக்கிறாரோ அவருடைய எண்ண ஓட்டங்களை பிரதிபலிப்பதாகவே அமைகின்றன.

பிந்தனவேவ, சத்துருக்கொண்டான் படுகொலை வழக்குகளிலும் இதனை நாம் அவதானிக்கலாம்.

இதுபல்லின யதார்த்தத்திற்கு நேர்விரோதமாக காணப்படுகிறது. இலங்கையின் சகல துறைகளிலும மறு சீரமைப்புத் தேவை என்பதையே தற்போதைய சமூகத்தினால் மிக உயர் நிலையில் வைத்துப் போற்றப்படவேண்டிய நிறுவனங்களில் காணப்படும் அவலமானபோக்கில் நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அதிகாரப்பகிர்வு தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்படும் இத்தருணத்தில் இந்த நிறுவனங்கள மீது அனைத்து சமூகத்தினரும் நம்பிக்கை வைப்பதற்கேதுவாக மாற்றங்கள் அவசியம்.

# அகதிகளின் தேசம்

வடக்குகிழக்கு இப்போதெல்லாம் அகதிகளின் தேசமாக காட்சியளிக்கிறது. இது கடந்த கால்நூற்றாண்டுகளில் நாம் அன்றாடம் காணக்கூடிய அவல காட்சியாகவும், எமது நடைமுறை வாழ்வாகவும் அமைந்திருந்தது. 25 வருடங்கள கடந்தாயிற்று இலங்கையில் தமிழர்களதும் ஏனைய தேசிய சமூகங்களதும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணக்கூடிய அனைத்து சந்தர்ப்பங்களும் அநியாயத்திற்கு இழக்கப்பட்டன. ஒன்றும் இயல்பாக தவறுதலாக இழக்கப்படவில்லை திட்டமிட்டு நாசமாக்கப்பட்டன.

தூரதிருஷ்டியுள்ள தலைமைகளை அழித்ததும் இன்றைய சமூக அவல நிலைக்குக் காரணம் தமிழ் தலைமைகளை அழித்தொழித்தவர்கள். பிரதானமாக புலிகளே என்பதை யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆனால் தமிழ்சசெல்வன் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பலாபலனான வடக்கு-கிழக்கு ஸ்ரீலங்காவின் நீதிமன்றம் பிரிந்ததையிட்டு கவலை அடைகிறார்.

ஆனால் இந்திய-இலங்கை ஒப்பந்தம் உருவாகி வடக்கு கிழக்கில் அதிகாரப்பகிர்வு அரசு கட்டமைப்பு உருவாகும் போதே அதனை பிரேமதாசவுடன் சேர்ந்து கொண்டு சீர்குலைத்தவர்கள் அவர்கள்.

ஏதோ ஒன்றும் தெரியாதவர்கள் போல் வெறுமனே பேரினவாதிகள் மீது மாத்திரம் பழிபோட முனைகிறார்கள். தமிழர்களின் அரசியலுரிமைக்கான போராட்டத்தை காட்டிக்கொடுத்ததோடல்லாமல் இன்று அகதிகளின் தேசம் ஒன்றை உருவாக்குவதில் அவர்களின் பங்கு மறைக்கவோ மறுக்கவோ முடியாதது.

தமிழ் மக்கள் வாழ்கிறார்களோ இல்லையோ பிரபாகரனுக்காக ஒரு இராச்சியத்தை உருவாக்க திடசங்கலபம் கொண்டுள்ளார்கள்.

தமிழ் மக்கள் புலிகள் தாம் ஆட்சி நடத்துவதாகச் சொல்லும் பிரதேசங்களிலிருந்து வெளியேறி வருகிறார்கள். சில வாரங்களில் இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிககை ஒன்றேகால் லட்சத்தையும் தாண்டி விட்டது.

இந்த மனிதப் பேரவலச் சவாலை எதிர் கொள்வவதற்கு உள்ளூர் வளங்கள் போதியதன்று. இந்தியாவினதும் சர்வதேச சமூகத்தினதும் பங்களிப்பு மனிதாபிமானப் பணிகள் இப்போது மிக மிக அவசியமானது.

**அகதித் தமிழன்**

# இப்போதெல்லாம் புலிகள் மனித உரிமைகளைப்பற்றிப் பேசுகிறார்கள்

புலிகளின் பிரமுகர்களும் ஊடகங்களும் இப்போது மனித உரிமைகள் பற்றிப்பேசத் தலைப்பட்டுள்ளன. இது நரமாமிச பட்சணி காருண்ணியத்தை பற்றிப் பேசியதை ஒக்கும். போதாக்குறைக்கு சர்வதேச மனிப்புச்சபை என்னசொல்கிறது. சர்வதேச மனித உரிமைக் கணிகாணிப்புக்குழு என்ன சொல்கிறது? ஹெய்க் உடன்படிக்கை என்ன சொல்கிறது? ஜெனிவா மனித உரிமை பிரகடனங்கள் என்ன சொல்கின்றன? சிறுவர் உரிமை பிரகடனங்கள் என்ன சொல்கின்றன என்றெல்லாம் சிலாகிக்கத் தொடங்கி விட்டார்கள் பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் என்பதற்கு இது நல்ல உதாரணமே.

நடந்தது என்னவென்றால் பிரபாகரனுக்கு என்ன மொழி தெரியுமோ அந்த மொழியை மற்றவர்களும் பரிச்சயப்படுத்திக்கொண்டு அவருடன் பேச முற்பட்டதன் விளைவு புலிகள் மனித உரிமை பற்றிக் கூக்குரல் இடுகிறார்கள். மாமியார் உடைத்தால் மட்குடம் மருமகள் உடைத்தால் பொற்குடம் என்ற மனோபாவம் எப்போதுதான் மாறுமோ தெரியாது.

கடந்த கால் நூற்றாண்டுகால இனமுரண்பாட்டுச் சிக்கலில் இலங்கையில் நிகழ்ந்த படுகொலைகளில் ஆட்கடத்தலில் சிறுவர்களை யுத்த அணிகளில் சேர்த்ததில்— பயங்கரவாதச் செயல்கள்— அமைதிக்கும் சமாதானத்திற்கும் விரோதமாகச் செயற்பட்டதில்— தமிழ் மக்களையும் முஸ்லீம் மக்களையும் காட்டிக் கொடுத்ததில் — தமிழ்த் தலைவர்களை, கல்விமான்களை, சமூக ஆர்வலர்களை, சாதாரண பொதுமக்களை படுகொலை செய்ததில், சித்திரவதை செய்ததில் இலங்கையில் தமக்கு நிகரில்லாத இடத்தை அவர்கள் வகிக்கிறார்கள்.

இத்தகையோர் நாளும் பொழுதும் மனித உரிமை பற்றிப் பேசுகிறார்கள். கற்பு நிலை என்று சொல்ல வந்தால் அது புலிகளுக்குப் பொருந்தாது என்பது போன்ற நியாயங்கள் சமகால உலகத்திற்கு சரிப்பட்டு வராது. கோழைகளுக்கும் கடைந்தெடுத்த அயோக்கியர்களுக்கும் அது சரிபட்டு வரலாம்.

அண்மையில் மட்டக்களப்புக்கு ராஜதந்திரிகள் வந்திறங்கிய ஹெலி மீது தாக்குதல் நடத்திய புலிகள் ஸ்ரீலங்கா அரசு ஒரு யுத்தம் நிகழும் பகுதியில் கொண்டு வந்து ராஜதந்திரகளை இறக்கியதன் மூலம் அவர்களை ஆபத்தான நிலைக்கு இட்டு வந்ததாக புலிகள் குற்றம் சாட்டியிருந்தனர்.

அது அப்படித்தான் என்றால் புலிகளின் நியாயப்படி சிறுவர் சிறுமியரை வன்னி புலத்தில் மோதல்கள் நிகழும் இடத்தில் வைத்திருந்ததும், அவர்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கியதும் எந்த வகையில் சேர்த்தி, தமது களமுனைகளில் முன்னரங்க காய்களாக நிறுத்தி பலிகொடுத்தது எந்த ரகத்தைச சேர்ந்தது பொதுமக்கள் செறிந்து புழங்கும் வைத்தியசாலை, பள்ளிக் கூடம், பஸ்நிலையம், சந்தை போன்ற பொது இடங்களில் கிளைமோர் வைப்பது எந்த ரகம் பொதுமககளுக்கு அத்தியாவசிய உணவு மருந்துப் பொருட்களை ஏற்றிச்செல்லும் கப்பல்களை [illegible]

# புலிகளின்.......

04ம் பக்கத் தொடர்ச்சி

ணர்ச்சி ஏற்பட்டு வரும் சூழ்நிலையில் புதிய புதிய பயங்கரவாத வழிமுறைகளை புலிகள் உலகபயங்கரவாதத்திற்கு வழிகாட்டிகளாக நின்று செயற்படுத்துவதை உலகம் மிகுந்த எச்சரிக்கையுடனும் மிக அவதானத்துடனே நோக்கும்.

அதைவிட புலிகள் இத்தகைய அழுத்தங்கள் மூலம் பேச்சுவார்த்தைக்கு பலமான நிலையில் நின்று தாங்கள் வர முடியும் என்று கனவு காணவும் முடியாது. நியாயமாக சிந்திக்கும் பெருவாரியான சிங்கள மக்கள் இனி வரும் காலங்களில் புலிகளுடன் பேசுவார்த்தை நடத்தலாம் என ஏற்றுக் கொள்வார்கள் என்பதும் சந்தேகமே. புலிகளின் இந்த நடவடிக்கை அவர்களின் மனங்களில் பெருமளவில் அமைதியற்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கும்.

எனவே புலிகளின் விமானத் தாக்குதல் என்பது அவர்கள் தமக்குத் தாமே வைத்த பொறியென்றே கூற வேண்டும்.

**அகதி தமிழன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் விமானத்தாக்குதல் தமிழர்களுக்கு போதையேற்றும் புலூடா



புலிகள் 26-03-2007 அன்று அதிகாலை 12.45 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு அருகில் உள்ள இலங்கை விமானப்படையின் மிகப்பிரதானமான தளமொன்றின் மீது குண்டுவீச்சு தாக்குதல் நிகழ்த்தியுள்ளனர்.

இதில் மூன்று விமானப்படையினர் உயிரிழந்துள்ளதாகவும், 16 பேர் காயமடைந்ததாகவும் இரு ஹெலிகளுக்கு சிறு சேதம் ஏற்படடதாகவும் இலங்கையின் பாதுகாப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் சேதங்கள் அதிகமானவையாக இருக்கலாமென தென்னாசிய பாதுகாப்பு ஆய்வாளர்கள தெரிவிக்கிறார்கள்.

எது எப்படியோ எமது சமூகங்களில் காணப்படும் வாய்பிளக்கும், ஆச்சரியப்படும், அதிசயங்கள் பற்றிய உணர்வுகளை புலிகள் இங்கு நன்கு பயன்படுத்தியிருக்கிறார்கள் என்றே எண்ணத்தோன்றுகிறது.

செபமாலை மாதாவின் திருசொருபத்திலிருந்து இரத்தக்கண்ணீர் வடிகிறது, புத்தரின் நெற்றிப் பொட்டிலிருந்து ஒளிக்கீற்று வீசுகிறது, தென்னங்கன்று அடிப்பாகத்தில் பிள்ளையாரின் முகத்தோற்றம் உருவாகியிருக்கிறது, அனுமார் கண்ணீர் வடித்தார் ஆகிய அதிசய ஆர்வங்கள் நிறைந்த சமூகத்தில் சூரியதேவன் விமானத்தை அனுப்பி குண்டுவீசினார் என்ற செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தாது என நாம் கருத முடியாது.

புலிகள் இங்கு விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தியது உண்மையே. ஆனால் அதற்காக அவர்கள் பெரும் ஆகாயப்படையொன்றை வைத்திருக்கிறார்கள் என்ற பிரச்சாரத்தை கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. அவர்களுடைய கெடடிக்காரத்தனத்தையும் குறைத்து மதிப்பிடத் தேவையில்லை.

மிகுந்த எச்சரிக்கை, அவதானம் தேவை. ஆனால் மலைப்படையத் தேவையில்லை. எந்த பின்புலத்திலிருந்து புலிகள் பிரம பிரயத்தனத்துடன் இத் தாக்குதலை நடத்தியிருக்கிறாரகள என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். புலிகள் தமது இணையத்தளமான தமிழ் நெட்டிலும், புதினத்திலும் ரைட் சகோதரர்களை மிஞ்சிய விமானத்தை கண்டுபிடித்த சந்தோசத்துடன் "சூரிய தேவன்" தேசிய தலைவருடன காட்சி கொடுத்த சில படங்கள் வெளியாகியிருந்தன. அந்தப் படங்களின் விமானம் செப்பனற்ற அமைப்புடன் குண்டுவீச்சு விமான விதிமுறைகளுக்கு புறம்பான பிரச்சார நோக்கிலான இந்த காட்சிகளும் அமைந்திருந்ததாக தென்னாசிய இராணுவ நிபுணர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். இதுவும் இங்கு கவனத்திற்குரியது.

கிழக்கில் சரமாரியான சரிவை சந்தித்த புலிகள் மன்னார் வவுனியா வீதியில் சில பகுதிகளில் படையினர் ஊடுருவிய நிலையில் பெரும் மனக்கிலேசத்துக்கு உள்ளாகி இருந்தனர். வன்னியும் போய்விடுமோ என்ற பயம் அவர்களை பேயாக நின்று ஆட்டுவிக்கிறது. சூரியதேவனை சொல்லவே தேவையில்லை. தமது புலி சகாக்கள எங்கே மரணித்தாலும் எங்கே பின்வாங்கினாலும் அவருக்கு பிரச்சனையில்லை. ஆனால் வன்னி புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசம் என்பது புலிகளின் நலன் சார்ந்தது மாத்திரமல்ல, பிரத்தியேகமாக பிரபாகரனின் இருப்பு எதிர்காலம் சார்ந்தது.

கிழக்கில் ஏற்பட்ட மாபெரும் மனிதாபினமான நெருக்கடி, மானிட பேரவலம் ஒன்றரை லட்சத்துக்கு மேற்பட்ட மக்களை நடுத்தெருவிற்கு கொண்டு வந்துள்ளது. வடக்கில் மடு தேவாலயப் பகுதியில் 15,000 இற்கு மேற்பட்ட மக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர். யுத்தம் புரிபவர்களுக்குள்ள முக்கியத்துவம் எதுவும் இந்த மக்களுக்கு இல்லை. இந்த மக்களின் வாழ்வு காயடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மக்களின் பேரில் தான் யுத்தம் நடைபெறுகிறது.

ஒரு பாசிச அமைப்பு ஜனநாயக வழிகளில் தோறகடிக்கப்பட முடியாதது என்பதையும், பாசிசம் மக்களின் அபிலாசைகள் எவற்றுக்கும் இடமளியாதது அவற்றுக்கு எதிரானது என்பதையும் நாம் மனதில் இருத்தியாக வேண்டும்.

வன்னியில் புலிகளின் கட்டாக்காலித்தனமான பிள்ளைகளை அபகரித்தல் செயற்பாட்டினால் வன்னி புலிகளின் கட்டுப்பாட்டில் வாழும் மக்கள் விரக்தியின் உச்சிக்கு சென்றுவிட்டார்கள். அவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபடக்கூடும் என்ற நிலையும் தோன்றியிருந்தது. ஆங்காங்கே வன்னியில் புலிகளின செயற்பாடுகளுக்கு எதிராக சிறு சிறு கிளர்ச்சிகள் ஏற்படாமல் இல்லை. அதன் பிரதிபலிப்பாகத்தான் மன்னார் மடு ஆலய வணத்துக்குரிய பிதா புலிகள் மடு தேவாலயப் பகுதிகளில் பிள்ளைகளை அபகரித்துச் செல்வதை நிறுத்த வேண்டும் என்று கோரியிருந்தார். மக்களின் விரக்தி எப்போது வேண்டுமானாலும் கோபமாக மாறலாம். "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்பார்கள்.

யாழ்ப்பாணத்திலும் நிலைமை இதுதான். நாளும் பொழுதும் படுகொலைகளும் பற்றாக்குறையான மூடுண்ட வாழ்வும் அங்கு எப்போது நிம்மதியாக வாழும் நிலை ஏற்படும் எமது பிள்ளைகளை எவ்வாறு காப்பாற்றப் போகிறோம் என்ற பெரும் கவலை சூழ்ந்துள்ளது.

பிள்ளைகளை மாத்திரமல்ல வயது வந்தவர்களைகூட புலிகள் விட்டு வைக்கவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் தமது பிள்ளைகளையோ உறவினர்களையோ சண்டைக்கு அனுப்புவதற்கோ அல்லது யாரும் பிடித்துச் செல்வதற்கோ வடக்கு கிழக்கு வாழ் எந்த தமிழரும் உடன்பாடில்லை. சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் சமாதானமாகவுமே அவர்கள் வாழ விரும்புகிறார்கள். இது நன்கு விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

யுத்தமானது தமிழர்களுக்கு எதிரான யுத்தம் என்ற தோற்றப்பாட்டையோ எண்ணக்கருவையோ கொண்டிருக்கக் கூடாது. அதே போல் சிங்களவர்களின வெற்றி என்பது போல தோற்றப்பாட்டையும் உருவாகக்கூடாது தமிழர்கள் வேறு. புலிகள் வேறு என்பது நன்கு புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

புலம் பெயர்ந்த தளத்தில் புலி ஆதரவாளர்கள் மத்தியில் கிழக்கில் அடிமேல் அடியாக ஏற்பட்ட வீழ்ச்சிகள பெரும் மனச்சோர்வையும் விரக்தியையும் ஏற்படுத்தியிருந்தது.

இத்தகையவொரு பலவீனமான நம்பிக்கையற்ற சூழ்நிலை ஏற்பட்டிருந்த நிலையில்தான் சூரியதேவன் எதையாவது செய்து எதையாவது அதிசயங்களை நிகழ்த்தி, வியப்பில் ஆழ்த்தி தனது இருப்பை தக்கவைத்துக் கொள்ளக் கருதினார்.

அவர்களுடைய விமானத் தாக்குதலுக்கும் களநிலை யதார்த்தங்களுக்கும் இடையே தலைகீழானதொரு நிலைமை காணப்படுகிறது. இந்த நிலையை சரிக்கட்டுவதற்காகத்தான் சகடையான தமது விமானத்தை வானத்துக்கு உயர்த்தி கட்டுநாயக்காவிற்கு இழுத்து வந்து தாக்குதல் நடத்தினார்கள். அதிஷ்டம் என்பது நினைத்தோ நினையாமலோ வருவதல்ல. இலங்கையின் பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்த கவனயீனமான நிலைமைகளோ, தொழில்நுட்ப பற்றாக்குறைகளோ புலிகளுக்கு சாதகமாக அமைந்து விட்டது. அவ்வளவே. அல்ஹைடா நியூயோர்க் வர்தகக் கோபுரங்களையே நிர்மூலமாக்கவில்லையா

இந்த மாதிரியான விமான நாடகங்களை பப்பர்கால்சா போன்ற காலிஸ்தான் பயங்கரவாத அமைப்புக்களும பிரயோகித்திருக்கின்றன.

ஆனால் புலிகளின் இராணுவ பேசசாளர் இளந்திரையன் தெரிவித்திருப்பது போல் மீண்டும் இத்தகைய தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற கூற்றுக்கான சாத்தியப்பாடுகள் மிகவும் அருந்தலானவையே. அனால் அதற்காக அலட்சியமாக இருந்துவிட முடியாது.

ஆனால் நிலைமைகள் இத்தகையதாக இருந்தாலும், அரசியல் தீர்வொன்று தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை பூர்த்தி செய்யும் விதமாக சுயமரியாதை, கௌரவத்தை உறுதிசெய்யும் முகமாக முன்வைக்காதவரை பயங்கரவாதத்திற்கான ஊற்றுக்கண்கள் இருந்து கொண்டேதான் இருக்கும். பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கான கட்டுப்படுத்துவதற்கான அதேவேளை தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய அரசியல் ஆயுதத்தை பிரயோகிக்கும் தெம்பும் திராணியும் தென்னிலங்கையிடம் இருக்க வேண்டும். இது மிகவும் முக்கியமானது. ஜனநாயகம் எண்ணம் கொண்ட தமிழ் அரசியல் சக்திகளின் குரல் மதிக்கப்பட வேண்டும். எல்லாவற்றையும் உதாசீனம் செய்வது அலட்சியப்படுத்துவது எமது நாட்டின் கால நூற்றாண்டுகால துயரம். எனவே சிந்தித்து நிதானமாக தொலை நோக்குடன புத்திசாதுரியத்துடன் இந்த நாட்டின் அனைத்து தேசிய சமூகங்களின் பாதுகாப்பு தனித்துவம் என்பவற்றை தீவிர கரிசனைக்கெடுதத செயற்பாடுகள் அவசியம்.

புலிகள் பலவீனப்பட்ட நிலையிலேயே தமது நாகாஸ்திரங்களை பிரயோகிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். வீதிச் சோதனையில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கு எதிராகவும், புலிகளால் மிகப் பெறுமதியாக கருதப்படும் தற்கொலை குண்டுதாரிகளை பாவிக்குமளவிற்கு நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

மீண்டும் இங்கு அறுதியிட்டு உரைக்க முன்வருவது என்னவென்றால் பயங்கரவதத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கையும் அரசியல் தீர்வுக்கான முன்னெடுப்புக்களும் சமாந்தரமாக முன்னெடுக்கப்பட வேண்டும்

**பிற்குறிப்பு:-**

80களின் பிற்பகுதியில் இந்திய இராணுவத்துடன் போர்புரிந்து வென்றதாக உலகம் வாழ் புலி ஆதரவாளர்களை புல்லரிக்க வைத்தவர்கள் எப்போதும் பிரேமதாசாவுடன் இரகசிய கூட்டு வைத்துக் கொண்டதையோ பிரபாகரன் பதுங்கியிருந்த முகாமை இந்திய அமைதிகாப்புப்படை சுற்றி வளைத்து பின்னர் டெல்லியின் உத்தரவுக்கிணங்க அமைதிகாப்புப் படை அப்பகுதியில் இருந்து வாபஸ் வாங்கியதையோ எப்போதும் பேசுவதில்லை.

ராஜீவ்காந்தி அவர்களின் படுகொலையை புலிகளும் அவர்களது ஆதரவாளர்களும் ஒரு விழாவாகவே கொண்டாடினார்கள். இந்தியா முடிந்தது என்று பாலசிங்கம் பெட்டிக்கடை மனோநிலையில் இருந்து பெருமிதப்பட்டதும் பின்னர் அண்மையில் வரலாற்றின் துன்பியல் என்று மூக்காலும், வாயாலும் அழுததும் தெரிந்த சங்கதிகளே.

அதன் விபரீத விளைவுகளை அவர்கள் அனுபவிக்க நேர்ந்தது. இப்போது ஒன்றும் நடவாதது போல் இந்தியா உதவ வேண்டும் என்று கெஞ்சிக் கூத்தாடுகிறார்கள்.

பின்னர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி வன்னிக்குள் புகுந்து கொண்ட சமாச்சாரங்களும் வரலாற்றில் நிகழ்ந்தன.

இலங்கையின் இராணுவத் தலைமையகத்தினுள் தற்கொலைத் தாக்குதல் நடத்தியதாக பெருமைப்பட்ட புலிகள் பின்னர் கிழக்குப் பிராந்தியத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டதும் சமகால சம்பவங்கள். புலிகள் பெரும் சாதனைகள் எனக் கருதும் இத்தகைய பயங்கரவாத நடவடிக்கைகளே பின்னர் அவர்களுக்கு பாராதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தின.

இத்தகைய பயங்கவரவாதச் செயல்கள் தமிழ் மக்களின் வாழ்வை நரகப் படுகுழிக்கு இட்டு வந்திருக்கின்றனவே தவிர வேறொன்றையும் தரவில்லை.

எனவே புலிகளின் வான் சாகசங்களையிட்டு புலிகளோ புலிகளின் ஆதரவாளர்களோ வானத்துக்கும் பூமிக்கும் குதிப்பதில் ஒரு பிரயோசனமும் இல்லையென்பதை வெகு விரைவில் புரிந்து கொள்வார்கள்.

இந்தியா இலங்கைக்கு அருகாமையில் ஒரு மிகப்பெரும் சமூக அபிவிருத்தியடைந்து வரும் வல்லரசாக மாறிவரும் மாபெரும் தேசம். அதன் அண்டை அயலில் எந்த தார்மீக வலுக்களுமற்ற சடடபூர்வ தன்மைகளுமற்ற ஒரு பயங்கரவாதக் குழு வான் சாகசம் காட்டுவதை அது சகித்துக் கொள்ளாது.

சர்வதேச சமூகமும் இதனை ஏற்றுக்கொள்ளாது. உலகளாவிய அளவில் பயங்கரவாதம் பற்றிய விழிப்பு

தொடர்ச்சி 03ம் பக்கம்

## ராஜதந்திரிகள் பயணம் செய்த ஹெலிகொப்டர் மீது தாக்குதல்

பத்திரிகை அறிக்கை.

மட்டக்களப்பிற்கு ஐ.நாவின் பிரதிநிதியும், இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ், யப்பான், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் ராஜதந்திரிகளும் பிரயாணம் செய்த ஹெலிகொப்டர் மீது புலிகள் நடத்திய தாக்குதலை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பத்மநாபா வன்மையாகக் கண்டிக்கிறது.

வடக்கு – கிழக்கில் அதிகரித்துவரும் மனிதாபிமான நெருக்கடிகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச சமூகம் பெரிதும் கவலைகொண்டுள்ளது, தனது கரிசனையை, அக்கறையை வெளிப்படுத்தி வந்தது. யுத்தத்தினாலும், சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட இலங்கையின் அனைத்து சமூகங்களின் நலன்சார்ந்து அண்மைக் காலங்களில் சர்வதேச சமூகம் பெரிதளவிலான உதவிகளை வழங்கி வந்திருக்கிறது.

தற்போது கிழக்கில் பெரிதளவிலான புனர்வாழ்வு புனர்நிர்மாண — அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் பற்றி ஆய்வு செய்வதற்கே ராஜதந்திரிகள் அங்கு சென்றிருந்தனர்.ஆனால் பொதுமக்களுக்கு, மருந்து அத்தியாவசியப் பொருட்களை கொண்டுசெல்லும் கப்பல்களை தாக்குபவர்கள் புலிகள். அத்தகைய மனிதாபிமானப் பணிகள் தொடர்பில் எத்தகைய பாதுகாப்பு உத்தரவாதத்தையும் வழங்க முடியாது என இடையறாது மிரட்டல் விடுபவர்கள் அவர்கள். இந்தியாவிலிருந்தோ, தென்னிலங்கையிலிருந்தோ வர்த்தகர்கள் கூட பொருட்களை கொண்டு செல்வதை விரும்பாதது மாத்திரமல்ல, அவ்வாறு கொண்டுசெல்ல நினைத்தாலே கொலை செய்பவர்கள் அவர்கள். புலிகளின் மனிதாபிமானப் பணிகள் தொடர்பான அக்கறை என்பது வெகுஜன விரோதமானதே. அந்த நிலையில் கிழக்கில் மனிதாபிமானப் பணிகளும் அபிவிருத்திப் பணிகளும் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் முழுவேகத்தில் முன்னெடுக்கப்பட்டு விடுமோ என்ற அங்கலாய்ப்பிலும், மனக்கிலேசத்திலுமே புலிகள் ராஜதந்திரிகள் பயணம் செய்த ஹெலிகொப்டர் மீது தாக்குதல் நிகழ்த்தினார்கள்.

ஜனங்களை எப்போதும் பீதியிலும், வறுமையிலும், அகதிவாழ்விலும் வைத்திருப்பதும் அன்றாடம் மரணமும், அனாதாரவும் என்ற நிலையை பராமரிப்பதே புலிகளின் மனப்பான்மையாகும். மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பமுடியாது. எமது பயங்கரவாதத்தை மீறி யாரும் கிழக்கின் மக்களுக்கு உதவிட முடியாது என்பதே புலிகள் விடுக்கும் செய்தியாகும். இச்செய்தியை இட்டு பணிந்து போவது புலிகளின் பாசிச பயங்கரவாதத்தை அலட்சியப்படுத்துவதாக அமையும். புலிகளின் அவாக்கள் பயங்கரவாதத்தின் அடிப்படையிலானவை. தமிழ் மக்களின் அபிலாசை ஜனநாயகம், மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்டது.

இராஜதந்திரிகள் தெய்வாதீனமாக புலிகளின் பயங்கரவாதத் தாக்குதலிலிருந்து உயிர்தப்பியது ஆறுதலான விடயம். இந்த காட்டுமிராண்டி நடவடிக்கை தொடர்பாக புலிகள் சொல்லும் பொய்கள் தான் அருவருப்பானவையாக காணப்படுகின்றன. ராஜதந்திரிகளை இலங்கை அரசு யுத்த மண்டலங்களுக்குள் கொண்டு வந்தது. அதனை தமக்கு முன்கூட்டியே தெரிவிக்காதது பொறுப்பற்ற செயலென நாடகமாடுகிறார்கள். தாம் ஏதோ தார்மீக நெறிமுறைகளை கடைப்பிடிப்பவர்கள்போல அவர்கள் பாசாங்குசெய்கிறார்கள்.

புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதும் தமிழ் மக்களுக்கும், இலங்கையின் பிற தேசிய சமூகங்களுக்கும் அதிகாரப் பகிர்ந்தளிப்பை மேற்கொள்வதும் மனிதாபிமான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதும் இருவெவ்வேறு முன்னுரிமை அளிக்கவேண்டிய பணிகள் என்பதை இங்கு நாம் சர்வதேச சமூகத்திற்கு தயவுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தி. ஸ்ரீதரன, பொதுச்செயலாளர்
ஈ.பி.ஆர்.எல்.எப் — பத்மநாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி- பத்மநாபா பொதுச்செயலாளர் தி. ஸ்ரீதரன் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தினகரன் வாரமஞ்சரிக்கு (08-04-2007) வழங்கிய செவ்வி இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகிறது.

**கேள்வி:- இலங்கை-இந்திய உடன்படிக்கையின் பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டு வடக்கு கிழக்கு மாகாண சபையை ஆட்சி செய்த பெருமை ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தைச் சார்ந்தது. இந்த வகையில் கடந்தகால அனுபவங்களை பாடமாகக் கொண்டு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக உங்கள் கட்சி முன்வைத்துள்ள யோசனைகள் பற்றி சுருக்கமாக கூற முடியுமா?**

பதில்:- எங்களது கட்சியினரின் அதிகாரப்பகிர்வு தொடர்பான கடந்த கால்நூற்றாண்டுகால அனுபவங்களின் அடிப்படையிலும், சமகால யதார்த்தங்களின் அடிப்படையிலும் நாம் எமது தீர்வு யோசனைகளை ஜனாதிபதியின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் போராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களிடம் முன்வைத்துள்ளோம். பெரும்பான்மை நிபுணர்குழுவின் அறிக்கை அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண அறிக்கை இவற்றை கருத்திற் கொண்டுள்ளோம்.

இலங்கையில் அரசியல் யாப்பு சீர்திருத்தம் நிகழ்த்தப்படுவதன் ஊடாக இலங்கை பல்லினங்களின் தேசமாக கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதே எமது யோசனைகளின் சாரம்சமாகும்.

வடக்கு கிழக்கை பொறுத்தவரை அது இணைந்த அலகாகவே அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று கருதுகிறோம். கடந்த 60 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் அனுபவித்து வந்த இனரீதியான பாரபட்சங்களின் விளைவு அவர்கள் மத்தியில் பாதுகாப்பற்ற உணர்வொன்று தோற்றுவிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் அதனை நாம் அவ்வாறே கருதுகிறோம்.

அதிகாரப்பகிர்வு அலகு என்பது இலங்கை ஆட்சி முறைமையின் ஒரு பகுதியாகவே நாங்கள் பார்க்கிறோம். மத்தியில் சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் பெரும்பான்மையானவர்கள் என்ற யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டே நாம் ஜனநாயக வழிக்கு வந்தவர்கள். எனவே அந்தவகையில் அதிகாரப்பகிர்வு அலகொன்றில் தமிழர்கள் பெரும்பான்மையாக இருப்பது தொடர்பாக அச்சமடைவது பொருத்தமற்றதென்றே நாங்கள் கருதுகிறோம். புலிகள வேறு, தமிழ் மக்கள் வேறு என்ற புரிதலில் இருந்தே பிரச்சினைகள் அணுகப்பட வேணடுமென நாம் எண்ணுகிறோம்.

இதேசமயம் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லீம் மக்கள், சிங்கள மக்களுக்கு உள்ள தனித்துவம், பாதுகாப்பு தொடர்பான கவலைகளை நாம் புறக்கணிக்கவில்லை.

முஸ்லீம் மக்களை பொறுத்தவரை அம்பாறை மாவட்டத்தை ஒரு தனி பிராந்தியமாக மாற்றுவது தொடர்பாகவோ அல்லது அம்பாறையை பிராந்திய அரச தளமாகக் கொண்டு வடக்கு கிழக்கில் காணப்படும் முஸ்லீம்களின் பிரதேசங்களை இணைத்த பிராந்தியத்தையோ (இதேவேளை அம்பாறை மாவட்டத்தினுள் வரும் தமிழ் பிரதேசங்கள் தமிழ் பிராந்திய அலகுடன் இணைக்கப்பட வேண்டும்) அல்லது இணைந்த வடக்கு கிழக்கினுள்ளே முஸ்லீம் மக்களுக்கென தனியலகு ஒன்றையோ இவை மூன்றில் எதைபற்றியாயினும் முஸ்லீம் மக்களின் தலைவர்களுடன் திறந்த மனதுடன் பேசத் தயாராக இருக்கிறோம்.

வரலாற்றில் திட்டமிட்ட குடியேற்றம் என்பதும் இனப்பிரச்சினை பூதாகரமாக உருவெடுப்பதற்கு ஒரு காரணியாக இருந்தது என்ற வகையில் அதனை கருத்திற்கெடுத்து சிங்கள மக்களின் தனித்துவமான ஏற்பாட்டிற்கும் நாம் தயாராக இருக்கிறோம்.

எனினும் வடக்கு கிழக்கில் இன சமூகங்களை தனித்தனியாக பிரிப்பது இருதரப்பிலும் உள்ள தீவிரவாத சக்திகளை பலப்படுத்தலாம் என்ற அச்சமும் எமக்கு இருக்கிறது.

மதத்தை பொறுத்தவரை இரு அவை பாராளுமன்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். பஎந்தவொரு இன சமூகத்திற்கும் பாரா பட்சமானதாக கருதப்படும் விடயங்கள் இந்த இரண்டாவது சபையின் அங்கீகாரத்தைப் பெற வேணடும். சிங்களவர்கள தவிர்ந்த இலங்கையின் தேசிய சமூகங்களின் 40 வீதமான பிரதிநிதித்துவம் இந்த அவையில் இருக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் எந்தவொரு பிரேரணை தொடர்பாகவும் எந்தவொரு தேசிய சமூகத்தினதும் 50 வீதமான பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்ளாத விடயங்கள் இந்த அவைக்கு விடப்பட வேண்டும்.

உப ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும. இந்த உப ஜனாதிபதி, ஜனாதிபதி அல்லாத சமூகத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும். மதச்சார்பின்மை அரசியல் யாப்பால் உறுதிப்படுத்தபடவேண்டும்.

இனப்பிரச்சனைக்கான தீர்வு சமஷ்டி முறையிலானதாக அமைய வேண்டும். ஆனந்தசங்கரி அவர்கள் முன்வைக்கும இந்திய முறையிலான தீர்வு தொடர்பான யோசனை கரிசணைக்கு எடுக்கப்பட வேண்டும்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகளில் முதன் முறையாக இலங்கையில் நான்கு சமூகங்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருப்பது (சிங்களவர், தமிழர், முஸ்லீம், மலையகத்தவர்) நம்பிக்கை தருவதாக அமைகிறது.

அதனை செழுமைப்படுத்தும் நோக்கிலேயே தமிழர்களின் கண்ணோட்டத்தில் இருந்து எமது யோசனைகளை முன்வைத்துள்ளோம். எமது யோசனைகள் என்பவை எமது நிலைப்பாடுகள். இவை பற்றி பரிசீலிப்பதற்கு, கலந்துரையாடுவதற்கு திருத்தங்களை மேற்கொள்வதற்கு நாம் தயாராகவே இருக்கிறோம்.

**கேள்வி:- அந்த உடன்படிக்கை உரிய முறையில் கடைபிடிக்கப்பட்டு புலிகளும் ஏற்றுக் கொண்டு இனப்பிரச்சினைத்தீர்வு குறித்த முயற்சியில் ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் நாட்டின் அரசியலில் திருப்பு முனை ஏற்பட்டிருக்குமென கருதுகிறீர்களா?**

பதில்:- நிச்சயமாக. நாம் இந்தப் பிரச்சினைக்கு 18 ஆண்டுகளுக்கு முனனர் தீர்வு காண்பதற்கான அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிட்டோம் என்றே கருதுகிறோம். புலிகள் ஒத்துழைத்திருந்தால் அதற்கு பிந்திய கடந்த 18 ஆண்டுகளில் தமிழ் மக்கள் இவ்வளவு துன்பங்களை இழப்புக்களை, வேதனைகளை அனுபவித்திருக்கத் தேவையில்லை.

1983 இனவன்முறை நிகழ்ந்து நான்கு ஆண்டுகளுக்குள்ளேயே இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. எமது உள்ளக கட்டமைப்புக்கள், எமது மக்கள அதற்குப் பிந்திய ஆண்டுகளை ஒப்பிடுகையில் பெருமளவு அழிவுகளை சந்தித்திருக்கவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக அந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கு இந்தியா பக்கபலமாக நின்றது. எனினும் கைக்கெட்டிய சந்தர்ப்பத்தை பிரிவினைவாதிகள் மக்களின் வாய்க்கெட்டாமல் செய்துவிட்டார்கள். சந்தர்ப்பவாத கூட்டு ஒன்றை அமைத்துக் கொண்டு வடக்கு கிழக்கில் உதயமாகி இருந்த புதிய அதிகார பகிர்வு அரச கட்டமைப்புக்கு எதிராகவும் இந்தியாவுக்கு எதிராகவும் சூழ்ச்சிகளிலும், வன்முறைகளிலும் ஈடுபட்டார்கள்.

இதில் எமது ஆயிரத்துக்கு மேற்பட்ட தோழர்களும் சக போராளிகளும், பொதுமக்களும் உயிரிழந்தனர்.

அதுமாத்திரமல்ல அதன் பின்னர் சந்திரிகா அவர்கள் முன்மொழிந்த சமஷ்டி கட்டமைப்பையும் நிராகரித்தார்கள். இந்த இருவேறு காலகட்டங்களிலும் அதிகாரப்பகிர்விற்காக நின்ற அரசியல் தலைவர்களையும், கல்விமான்களையும் கொன்று தள்ளினார்கள்.

சமூகமாக அந்த ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட்டிருக்குமேயானால் இன்று மட்டக்களப்பின் மூன்றிலொரு பகுதி மக்கள் மனித பேரவலத்தை எதிர்நோக்குவதற்கோ, வன்னி, யாழ்ப்பாணம் என்று தொடர்பற்று வாழ்வதற்கோ மனித உரிமை மீறல்களுக்கோ இடமில்லாது போயிருக்கும். இன்று தமிழ் மக்கள் இலங்கையின் ஏனைய தேசிய சமூகங்களுடன் இணைந்து தேச நிர்மாணப்பணியில் ஈடுபட்டிருப்பார்கள். ஒரு பெருமபாய்ச்சலாக சமூக பொருளாதார அபிவிருத்திகள் நிச்சயமாக ஏற்பட்டிருந்திருக்கும். துரதிஷ்டவசமாக அப்படியான ஒரு நிகழ்காலத்திற்கு அன்று புலிகள் இடமளிக்கவில்லை.

**கேள்வி:- இனப்பிரச்சினையை எவ்வாறு வரைவிலக்கணப்படுத்துகிறீர்கள்?**

பதில்:- பல்லினங்கள் வாழும் நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்கள் கல்வி, தொழில், நிலம், கலாச்சாரம், மொழி, சமயம் இன்னோரன்ன விடயங்களில் தாம் பாரபட்சமாக நடத்தப்படுகிறோம் என யதார்த்தமாக உணரும் போது இப்பிரச்சினை தோன்றுகிறது. இந்த சமூகங்களின் சந்தேகங்கள், கசப்பான அனுபவங்களுக்கான காரணிகள் களையப்பட வேண்டும். தாம் இரண்டாம் பட்சமாக நடத்தப்படுகிறோம் என்ற மனநிலை அகற்றப்பட வேண்டும். அப்போதுதான் மனிதர்கள் சுயமரியாதை கௌரவத்துடன் ஒருவருடன் ஒருவர் கலந்துறவாடுவர். நாம் எல்லோரும் மனிதர்கள் என்று சிந்திப்பதற்கு இது தடையாகவும் இருக்கிறது. இதுவே இங்கு இனப்பிரச்சனை. உலகில் பல நாடுகளில் இந்தப் பிரச்சனைகள் சுமூகமாகத் தீர்க்கப்பட்டுள்ளன. எமது அண்டைநாடு இந்தியா இதற்கு சிறந்த உதாரணம்.

**கேள்வி:- ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்ததன் மூலம் ஏதாவது நன்மையடைந்துள்ளீர்களா?**



பதில்:- நிச்சயமாக நன்மையடைந்துள்ளோம். கடந்த கால்நூற்றாண்டுகால வன்முறை எத்தகைய நன்மையை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுத்திருக்கிறது. அது தமிழ் மக்களை நடுவீதிக்கு கொண்டுவந்து நிறுத்தவில்லையா? இலங்கையின் சகல சமூகங்களிடையேயும் பாரதூரமான விரிசலையும் அழிவுகளையும், துன்பங்களையும் ஏற்படுத்தவில்லையா? தமிழ் சமூகத்துடன் நட்புறவுடன் இருந்த அண்டைநாட்டில் கசப்புணர்வுகளை ஏற்படுத்தவில்லையா? ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் ஈழத் தமிழர்கள் சந்தேகத்துக்குரியவர்களாக பார்க்கப்படும் நிலைமை தோற்றுவிக்கப்படவில்லையா? எமது மக்களின் வாழ்வும் வளமும் பாரதூரமான அளவில மீள்கட்டியெழுப்ப முடியாதளவில் சிதைத்து சின்னாபின்னப்படுத்தப்பட வில்லையா?

ஆம் ஜனநாயக வழிக்கு வந்ததன் மூலம் இவற்றையெல்லாம் புரிந்து கொள்வதற்கும், அறிந்துகொள்வதற்குமான மனிதர்களாக வாழ்வதற்குமான சந்தர்ப்பத்தை பெற்றுள்ளோம்.

வன்முறைக்கு மாற்றாக நாம் இந்த வழியை பின்பற்றி முழுநேர மக்கள் இயக்கமொன்றை விழுந்த்தியிருந்தால் நாம் நீண்டகாலத்திற்கு முன்னர் பேரழிவுகளுக்கு இடமில்லாமல் ஒரு தீர்வை எட்டியிருக்கலாம். ஆயுத போராட்டம் என்பது மிகவும் கவனமாக கையாளப்பட வேண்டியது. அரசியல் வழிகாட்டலும், மாபெரும் மனித நேயமும் இல்லாவிட்டால் அது சொந்த மக்களையும், சகோதர சமூகங்களையும் சவக்குழிக்கு அனுப்பும் பாசிசமாக மாறிவிடும் என்பது எமது சமூக அனுபவமாகும. எமது சமூகத்தில் அத்தகைய இயக்கத்தை நடத்தக் கூடியவர்களும் ஏற்கனவே கொல்லப்பட்டு விட்டார்கள். எமது தேசத்தின் நெல்சன் மண்டேலாவும், ஆங்சாங்சுகியும், சேகுவேராவும், பிடலும் போராட புறப்பட்வர்கள் என்று சொல்லப்பட்டவர்களாலேயே கொல்லப்பட்டுவிட்டார்கள்.

**கேள்வி:- இனப்பிரச்சினை தொடர்பான உங்களது கட்சியின் யோசனைகளில் மலையக மக்கள் தொடர்பாக?**

பதில்:- மலையக மக்கள் தொடர்பாக பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களால் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகளில் நான்கு சமூகங்கள் இந்நாட்டில் இருப்பதாக குறித்துரைத்திருப்பது முககியமான அம்சம். இதைவிட மலையக மக்கள் தொடர்பாக மலையகத்தின் கட்சிகள் சிலவும், கல்விமான்களும் கலாச்சார கவுன்சில் ஒன்று தொடர்பாக தெரிவித்திருக்கும் யோசனைகளும், உள்ளூராட்சி சபை மட்டங்களில் இருந்து மாவட்டம், மாகாண மட்டங்களில் மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை கரிசனைக்கெடுத்தும் முன்வைத்துள்ள யோசனைகளை வரவேற்கிறோம். மலையக மக்களுக்கு எத்தகைய அதிகாரப்பகிர்வு தேவை என்பது தொடர்பான கோரிக்கைகள் மலையகத்தில் இருந்தே வரவேண்டும்.

இலங்கையின் அரசியல் சமூக வாழ்வு ஜனநாயகமயப்படுத்தப்படுவதும் பல்லினங்களின் தேசமாக இந்நாடு மலர்வதும் ஆகிய விடயங்களின் அடிப்படையில் மலையக மக்களின் அபிலாசைகள் கருத்திற்கெடுக்கப்பட வேண்டும். உள்ளக கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் சமூக பொருளாதார மாற்றங்களை நிகழ்த்துவதற்கும் இலங்கையின் அதிகாரப் பகிர்விற்கான செயற்பாட்டில் மலையக மக்களும் உரிய இடத்தை பெற வேண்டும் என்பதே எமது கருத்து.

**கேள்வி:- முஸ்லீம்களுக்கென கிழக்கில் தனியான அலகொன்று முன்மொழியப்பட்டுள்ளது குறித்து விளக்க முடியுமா?**

பதில்:- முஸ்லீம்கள் சிங்கள மேலாதிக்கத்தினால் மாத்திரமல்ல தமிழ் மேலாதிக்க வாதத்தினாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 17 ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம்கள் இன்னும் சொந்த இடங்களுக்கு திரும்ப முடியவில்லை. காத்தான்குடி பள்ளிவாசலில் இருந்து அண்மைய மூதூர் அனர்த்தம் வரை பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைவிட பொருளாதார அழிவுகளும், அபகரிப்புக்களும் நிகழ்ந்திருக்கின்றன. ஒரு காலத்தில் தமிழ் பேசும் மக்கள் என்ற சொற் பதத்தின் கீழ் ஒன்றாக வாழ்ந்த முஸ்லீம் மக்கள் தற்போது நியாயமாகவே தமது தனித்துவம், பாதுகாப்பு சமூக பொருளாதார வாழ்வியல், எதிர்காலம் தொடர்பாக கவலை கொண்டுள்ளார்கள். அவர்கள் கடுமையாக மனக்காயப்படுத்தப்பட்டிருககிறார்கள். அந்த வகையில் அவர்களின் தனித்துவம் தொடர்பான, பாதுகாப்புத் தொடர்பான அவர்களது அபிலாசைகள் கருத்திற்கெடுக்கப்பட வேண்டும்.

முஸ்லீம்களுக்கு என்ன வேண்டும் என்பதை முஸலீம் மக்களே தீர்மானிக்க வேண்டும். இது தொடர்பில் புவியியல் ரீதியாக கலந்துவாழும் மக்கள் என்ற வகையில் தமிழ் ஜனநாயக அரசியல் தலைவர்களும், முஸ்லீம் தலைவர்களும் பேசவேண்டும். அதேபோல் தென்னிலங்கை அரசியல் தலைவர்களும் வடக்கு கிழக்கு முஸ்லீம் அரசியல் தலைவர்களும் பேச வேண்டும். இது எமது கருத்து

**கேள்வி:- இந்தியாவின் உதவியில்லாமல் இனப்பிரச்சனைக்கான தீர்வு சாத்தியமாகும் எனக் கருதுகிறீர்களா?**

பதில்:- இந்தியா இந்த நாட்டுடன் 2500 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்று தொடர்புடைய மாபெரும் தேசம். இந்த நாட்டின் அனைத்து இன மக்களினதும் வேர்களும் அங்குதான் இருக்கின்றன. எமது வாழ்க்கை முறை கலாச்சாரம், மொழி, ஆகியன தொடர்புபட்டவை. இனப்பிரச்சனை 80களில் இன வன்முறைகளுக்கு பின்னர் தீவிரம் பெற்றபோது இலங்கையில் இனப்பிரச்சனை தீர்வு காண்பதற்கு பல்வேறு வழிகளில் இந்தியா முயற்சிகளை மேற்கொண்டது. ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப்பகிர்விற்காக அது தனது அனுபவங்களை இலங்கை மக்களுடன் பகிர்ந்து கொண்டது. இலங்கையில் இனப்பிரச்சனை தீவிரமடைந்ததன் பின்னர் எமது மக்களில் பல்லாயிரக்கணக்கானோர். இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளனர். இந்தியா இலங்கையின் இனப்பிரச்சனை தீர்வு தொடர்பில் ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டதற்காக இளம் பிரதமர் ஒருவரையும் பலிகொடுக்க நேர்ந்தது.

இவற்றுக்கெல்லாம் அப்பால் இந்தியா அதிகாரப் பகிர்ந்தளிப்பு முறையில் வெற்றிபெற்ற நாடு. பல இன சமூகங்களின் கலவையாக வானவில்லாக மதச்சார்பற்ற தேசமாக இந்தியா விளங்குகிறது. நெகிழ்வுத்தன்மையான இந்திய அரசியல் அமைப்பு இன்றுவரை புதிய மாநிலங்களை, யுனியன் பிரதேசங்களை இந்திய இறையான்மைக்குள் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. சமூக அரசியல வாழ்வு ஓயாது ஜனநாயக மயப்படுத்தப்படுகிறது. எண்ணிக்கையில் பெரிது சிறிது என்றில்லாமல் இந்தியாவின் வெவ்வேறு பிராந்தியங்கள், இன, மத, மொழி சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இந்திய தேசத்தின் தலைவர்களாக மிளிர்கிறார்கள். இந்தியாவின் இத்தகைய அரசியல் சமூக நிலவரங்கள் உலகின் முன்னணி நாடாக இந்தியாவை நகர்த்திக் கொண்டிருக்கிறது. எனவே இந்திய அனுபவங்களின் உதவி எமக்கு மிக. மிக அவசியமானது.

**கேள்வி:- 13வது அரசிலமைப்பு சீர்திருத்தத்தின் பிரகாரம் மாகாணசபை முறை கொண்டுவரப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப்பகிர்வு வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட இந்த மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களும் பறிக்கப்பட்டுள்ளன இது குறித்து என்ன கூறுகிறீர்கள்?**

பதில்:- இந்த அதிகாரங்கள் பறிக்கப்பட்டது தவறான அணுகுமுறை மாத்திரமல்ல சட்ட விரோமானதும் கூட. சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, புனர்வாழ்வு புனரமைப்பு, உள்ளூராட்சி அமைப்புக்கள் தொடர்பான அதிகாரங்கள் உட்பட பல அதிகாரங்கள் மாகாண அரசிற்கு இருந்தன. இங்கு அந்த அதிகாரங்கள் மத்தியை நோக்கி கொண்டு செல்லப்பட்டதற்கு, அதிகாரப் பகிர்வு பற்றிய முன் அனுபவமின்மையும் அதைப்பற்றிய புரிதல் இன்மையும் அதிகாரமைய சிந்தனை முறையும் காரணம் எனலாம்.

மாகாண சபை கலைக்கப்பட்டு அல்லது இடைநிறுத்தப்பட்டு அல்லது மாகாண அரசாங்கம் (மாகாண அமைச்சரவை) இடைநிறுத்தப்பட்டு அல்லது நீக்கப்பட்டாலும் கூட மாகாண அரசாங்க செயற்பாடு ஆளுநர் ஊடாகவும் மாகாண நிர்வாகத்தினூடாகவும் நடைமுறைபடுத்தப்பட்டிருக்க வேண்டும்.

எமது அண்டை நாட்டில் மாநில சட்டசபைகள் கலைக்கப்படும் சந்தர்ப்பங்களில் மாநில அரசாங்கம் நீக்கப்படும் சந்தர்ப்பங்களில் மாநில அரசாங்க செயன்முறை மத்திக்கு எடுத்துச் செல்லப்படுவதில்லை. ஆளுநர் ஊடாகவும், மாநில அரச நிர்வாகத்தினூடாகவும் அந்த கட்டமைப்பு தொடர்ந்து இயங்கும்.

இங்கோ தலைகீழ். 1980களின் பிற்பகுதியில் மிகவும் ஆற்றல்வாய்ந்த கல்விமான்களான நிர்வாக சேவை அதிகாரிகள் விருப்பார்வத்தின் அடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாண அரச நிர்வாகத்தில் பணியாற்ற முன் வந்தார்கள். மிகவும் ஆபத்தானதொரு காலகட்டத்தில் அந்தப் பணிக்கு அவர்கள் தம்மை அர்ப்பணித்திருந்தார்கள்.

ஆனால் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை கலைக்கப்பட்டு மாகாண அரசாங்கம் நீக்கப்பட்டதன் பின் அவர்கள் எதுவித அதிகாரமும் அற்றவர்களானார்கள். விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

உண்மையில் அந்த அரசாங்க கட்டமைப்பு நிலைநிறுத்தப்பட்டிருக்க வேண்டும். அது இவ்வாறு அர்த்தம் இழந்து

தொடர்ச்சி 06ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தி

## வாழ்க்கைச் சித்திரம்

### பி.ஆர். நந்தாவின் நூலில் இருந்து




## ரௌலட் சட்டங்கள்

மார்ச் 1919-ல் இந்திய அரசாங்கம் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சட்டமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா இந்திய உறுப்பினர்களின் எதிர்ப்புக்களிடையே, ரௌலட் மசோதாக்களை அவசரமாக நிறைவேற்றியது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சட்ட மன்றத்தில் நடந்த வாக்குவாதங்களை காந்தி கேட்டார். இந்திய உறுப்பினர்கள் காரணம் காட்டி விளக்கிய திறமையான பேச்சுக்கள் அரசு மன்றங்களில் வீணாகப் போனதை அவர் கண்டார். பின்னர் அவர் இப்படி எழுதினார். "உண்மையாக தூங்கும் மனிதனை எழுப்பலாம், தூங்குவது போல வெறுமனே பாவனை செய்பவனை என்னதான் செய்தாலும் எழுப்ப முடியாது." இந்திய அரசாங்கம் மக்கள் உணர்வுகளுக்கு எந்தவித மதிப்பும் அளிக்கவில்லை என்ற தீர்மானமான முடிவு அவருக்குள் உருவானது. மக்கள் கருத்துக்கு உண்மையில் முக்கியத்துவம் அளிக்கும் ஒரு அரசாங்கம், எவ்வளவுதான் உயர்ந்ததாக இருந்தாலும் பலதரப்பட்ட மக்கள் கருத்தால் எதிர்க்கப்படும் ஒரு நடவடிக்கையை மேற்கொண்டிருக்காது.

அரசாங்க சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட ரௌலட் மசோதாக்களுக்கு எதிரான போராட்டம் பலனளிக்காது போகவே ரௌலட் மசோதாக்களை வாபஸ் பெற வைக்க சத்தியாகிரகத்தின் உதவியைத்தான் நாட வேண்டும் என்று காந்தி உணர்ந்தார். இதற்கு ஏற்கனவே அவர் பெப்ரவரி 1919-ல் ரௌலட் மசோதாக்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வரைவு உறுதிமொழி ஒன்றை அவர் சுற்றோட்டம் விட்டிருந்தார். "அந்த மசோதாக்கள் சட்டமாக அமுலாக்கப்படும் பட்சத்தில், அவை திரும்பப் பெறப்படும் வரை அந்த சட்டங்களை அல்லது இது போன்ற மற்ற சட்டங்களை, இதற்கெனவே நியமிக்கப்பட்ட செயற்குழு அங்கீகரிக்காத வரையில் நாங்கள் பணிவுடன் மறுப்போம். இந்தப் போராட்டத்தில் நாங்கள் உண்மையை உறுதியாகப் பின்பற்றுவோம், எந்த ஒரு உயிருக்கோ, நபருக்கோ, உடமைக்கோ ஊறு விளைவிப்பதை தவிர்ப்போம் என மேலும் உறுதி கூறுகிறோம்."

அரசாங்கம் முதலாவது ரௌலட் மசோதாவை சட்டமாக்கிய இந்த நேரத்தில், தனது நோயினின்றும் பூரண குணமடையாத காந்தி, சவாலை சமாளிக்கத் தயாராகிவிட்டார். அவர் நாடு முழுவதும் பயணம் செய்து சத்தியாக்கிரக சபதத்தில்-பொதிந்திருக்கும் கருத்துக்களை மக்களுக்க விளக்கியதோடு. சத்தியாக்கிரக சபா எனும் ஒரு புது அமைப்பையும் தோற்றுவித்தார். எல்லோரும் வெறுக்கும்படியான சட்டத்தை எதிர்த்து மக்கள் எல்லா வேலைகளையும் தற்காலிகமாக நிறுத்திவிட்டு, விரதமும், பிரார்த்தனையும் மேற்கொண்டு, ஒருநாள் வேலை நிறுத்தம் செய்யும்படி அழைப்பு விடுத்தார். துக்கம் அல்லது எதிர்ப்பை தெரிவிக்கும் விதமாக அனுசரிக்கப்படும் "ஹர்த்தால்" இந்தியாவில் புதிதானதொன்றல்ல. ஆனால் ஒரு நாள் தேசிய வேலைநிறுத்தம் என்பது ஒரு கைதேர்ந்த வேலை. சரிவரப் புரிந்து கொள்ளாததின் காரணமாக தில்லியில் ஏப்ரல் 6-க்கு பதில் மார்ச் 30 அன்றே ஹர்த்தால் அனுசரிக்கப்பட்டது. சில கலவரங்களால் அது பாதிக்கப்பட்டது. வரம்பு மீறிய கும்பலையும் அதேபோல் உள்ளூர் அதிகாரிகளையும் காந்தியின் வார்த்தைகளில் ஒரு ஈயை நசுக்க அவர்கள் சுத்தியலை உபயோகப்படுத்தினர். காந்தி உடனே கண்டித்தார். பஞ்சாபில் பதற்றம் அதிகரித்தது. காந்தி அங்கு வந்தால் அது அமைதியை நிலைநாட்ட உதவும் என அங்குள்ள உள்ளூர் தலைவர்கள் எண்ணினர். ஆனால் அரசாங்கம் காந்தி பஞ்சாப் போய் சேரவிடவில்லை. அவர் டில்லிக்கு செல்லும் வழியில் ஒரு சிறிய ஸ்டேஷனில் பெட்டியினின்றும் இறக்கப்பட்டு, பம்பாய் போகும் ரயிலில் ஏற்றப்பட்டார். அங்கு அவர் விடுவிக்கப்பட்டார். அவர் இல்லாத சமயத்தில் பம்பாய் நகரம், அஹமதாபாத், நாதியாத் அஹிம்சை கொள்கையை மறந்து விடும் என்று எதிர்பார்த்திராத அவரது சொந்த மாகாணத்தின் மற்ற இடங்களில் வன்முறைகள் நிகழாமலிருந்திருந்தால், அவர் திரும்பவும் டில்லிக்கே சென்றிருப்பார். வன்முறையின் உள்ளுறை சக்திகளை தாம் குறைத்து எடை போட்டுவிட்டோம், என்ற முடிவுக்கு அவர் வந்தார். தாம் வந்த பாதையிலே திரும்பிச் செல்லவும், திரும்ப கைதாகும் எண்ணத்தைக் கைவிடவும், சிறிது தடை செய்து விட்டு பின் முழுவதுமாக சத்தியாக்கிரகத்தை கைவிடவும் அவர் தீர்மானித்தார். மக்கள் தயாராக இருக்கிறார்களா என நிச்சயப்படுத்திக் கொள்ளாமல் ஒரு மக்கள் இயக்கத்தை ஆரம்பித்த தமது இமாலய தவற்றிற்கான பிராயச்சித்தமாக அவர் மூன்று நாட்கள் உண்ணாவிரதமிருந்தார்.



இதற்கிடையில் பஞ்சாபில் நடந்த சம்பவங்கள் துயரத்தின் உச்சியையே தொட்டு விட்டன. ஏப்ரல் 10 அன்று சில உள்ளூர் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களை விடுதலை செய்யக் கோருவதற்காக கூடிய ஒரு கும்பல், தறி கெட்டுப்போய் இரு வங்கிகளை தாக்கியதுடன் ஐந்து ஐரோப்பியர்களை கொலை செய்தது. 'பைசாகி' திருவிழா நாளன்று, பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்ற, அமிர்தசரசில் உள்ள ஜுலியன் வாலாபாக் ஒரு பயங்கர சம்பவத்தின் நிலைக்களனாயிற்று. ஜெனரல் டயரின் ஆணையின் பேரில் பத்து நிமிடங்களில் 1650 தடவை துப்பாக்கிச்சூடு நடந்தது. கிட்டத்தட்ட 400 பேர் உயிரிழந்தனர். 1200 பேர் காயமுற்றனர். ஆளுநர் சர் மைக்கேல் ஓ டையர் அவரது ஆலோசகர்களும், பிரிட்டிஷ் அரசுக்கு ஆபத்து என்று நம்பினர்.

பஞ்சாபின் பல மாவட்டங்களில் இராணுவ அடக்குமுறைச் சட்டம் விதிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அங்கு ஒரு கொடுங்கோல் ஆட்சி நிலவியது. பஞ்சாப் கலவரங்களின் மூலத்தை விசாரிப்பதற்காக ஹண்டர் பிரபு தலைமையில் அரசாங்கம் ஒரு விசாரணைக் குழுவை நியமித்தது. ஹண்டர் கமிட்டியைப் புறக்கணித்த இந்திய தேசிய காங்கிரஸ், சி.ஆர்.தாஸ், எம்.ஆர். ஜயகர் அப்பாஸ் த்யாப்ஜி, காந்தி போன்ற பிரபல வக்கீல்கள் கொண்ட அரசு சாரா கமிட்டி ஒன்றை நியமித்தது. இந்த கமிட்டியின் உறுப்பினராக இருந்தபோதுதான், பஞ்சாபில் இராணுவ ஆட்சியின் உண்மையான தோற்றம் காந்திக்குத் தெரியவந்தது. அவரே ஆழ்ந்த கவனத்துடன் ஆய்ந்தறிந்த மறுக்க முடியாத சாட்சியங்களின் அடிப்படையில், எதேச்சாதிகார ஆட்சியின் அதிர்ச்சியூட்டும் போக்கை அவர் கண்டறிந்தார். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இறைவனால் நியமிக்கப்பட்ட, எல்லோருக்கும் சம நீதி வழங்கும் ஒரு கருணையுள்ள அமைப்பு என அவர் இது காணும் மனதுக்குள் போற்றி வளர்த்து வந்த தோற்றம், தவிடுபொடியாகித் தரையில் சிதறுவதுபோல் உணர்ந்தார்.

காந்தி, இப்பொழுது கூட பிரிட்டிஷ் அரசிடமிருந்து முழுவதும பிரிந்து போகவில்லை. பஞ்சாபிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு ஒரு சில அதிகாரிகளின் தவறான போக்கே காரணம் என வாதிட்ட அவர், இந்த உண்மை தெரியவரும்போது அரசாங்கம் அதற்குரிய பரிகாரம் தேடும் என்று நம்பினார். அவரது இந்த நம்பிக்கை ஏமாற்றத்திலேயே முடிந்தது. பஞ்சாபில் தவறான ஆட்சிக்குப் பொறுப்பான ஆங்கிலேய அதிகாரிகள் உடனே திரும்ப அழைத்துக் கொள்ளப்படவில்லை. மாறாக வீரசிங்கங்கள் என்று அவர்களை ஐரோப்பிய சமுதாயம் கொண்டாடியது.

கமிட்டி அறிக்கை வெளியானபோது அது காந்திக்கு "குற்றங்களை மறைப்பதற்கான மேல் பூச்சாகத்தான் தெரிந்தது. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில். பஞ்சாப் படுகொலை பற்றிய வாக்குவாதங்களை கேட்ட பின், ஒரு இந்திய நிருபர் காந்திக்கு இவ்விதம் எழுதினார். "நமது நண்பர்கள் அவர்களது அறியாமையை வெளிப்படுத்தினர். நமது எதிரிகள் அவர்களது ஆணவத்தைக் காட்டினர்."விருப்பத்திற்கு மாறாகவும், வேதனையுடனும் காந்தி தள்ளப்பட்டார். அவர் நேராக்க முயன்று கொண்டிருந்த அரசாங்க அமைப்புக்கு முடிவு காண வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது என்று முடிவக்கு வந்தார்.

இந்திய அரசியலில் "கிலா..பத்" இயக்கம் எனும் மற்றொரு சிக்கல் ஏற்படாதிருந்திருந்தால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் காந்தி கொண்டிருந்த தொடர்பு இப்படி திடீரென துண்டிக்கப்பட்டிருக்காது. நேச நாடுகளின் வெற்றிக்குப் பின் துருக்கி தேசத்தின் மீது திணிக்கவிருக்கும் நிபந்தனைகளின் பேரிலும், மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள முஸ்லீம்களின் புனிதத் தலங்களுக்கு ஏற்படப்போகும் நிலையின் பேரிலும் இந்திய முஸ்லீம்கள் பெரிதும் கலவரப்பட்டனர். உள்ளுக்குள்ளேயே அடக்கி வைத்திருக்கும் முஸ்லீம்களின் அதிருப்தி கரையை உடைத்துக் கொண்டு வன்முறை வழியே செல்லப் போகிறது என காந்தி அஞ்சினார். எனவே, அவர்கள் அவரது உத்தியை ஏற்றுக்கொண்டால், கிலா..பத் பிரச்சினையில் முஸ்லீம் சமூகத்திற்கு தாம் வழிகாட்ட முன்வருவதாக அவர் சொன்னார். காந்தியின் பிரிட்டிஷ் அரசுக்கெதிரான வன்முறையற்ற ஒத்துழையாமை திட்டம் செப்டம்பர் 1920-இல் இந்திய தேசிய காங்கிரஸால் அங்கீகரிக்கப்படும் முன்பே அது கிலா..பத் தலைவர்களின் ஆதரவை பெற்றுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தொடரும்......

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை............

05ம் பக்கத் தொடர்ச்சி

போனதால் வருங்காலத்தில் இத்தகைய அதிகாரப்பகிர்வு அலகொன்றில் செயற்படுவதற்கு ஆற்றல்வாய்ந்த அதிகாரிகளை இணங்கச் செய்வதென்பதே மிகவும் கடினமான பணியாக இருக்கும்.

எதிர்காலத்தில் அதிகாரப்பகிர்வு நடைமுறை என்பது இந்த விடயங்களை கருத்திற்கெடுத்ததாக அர்த்தபுஷ்யானதாக அமைய வேண்டும் என்பதற்காகவே இதை குறிப்பிடுகின்றேன்.

**கேள்வி:- வடக்கு கிழக்கு பிரிப்பின் மூலம் இலங்கை-இந்திய ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதாக கருதுகிறீர்களா?**

பதில்:- வடக்கு கிழக்கு இணைப்பு என்பது ஒரு அரசியல் விவகாரம். நாம் இதனை அரசியல் கண்ணோட்டத்துடனேயே அணுகுகிறோம். தமிழ்மக்களில் ஒரு கணிசமான பகுதியினர் தாம் பாரம்பரியமாக வாழ்ந்த இடங்களில் இருந்து வெளியேறியோ அல்லது வாழ்வு சிதைக்கபட்ட நிலையிலேயே வாழ்கிறார்கள். முஸ்லீம் மக்களிலும் கணிசமான பகுதியினர் அவ்வாறே தாம் தமது வாழ்விடங்களில் பாதுகாப்பாக வாழவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அது பாதுகாப்பை இழந்த ஒரு சமூகத்தின் உளப்பாங்கும் கூட. இம் மக்கள் தமது இடங்களில் மீள் குடியேறி இயல்பு வாழ்வொன்றை ஆரம்பித்த பின்னர் கிழக்கின் தமிழ் தலைவர்கள் முஸ்லீம், சிங்கள தலைவர்களுடன் பேசி முடிவொன்றை எட்டமுடியும்.

**கேள்வி:- விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலந்தொட்டு மலையக மக்கள் தொடர்பாக ஈ.பி.ஆர்எல்.எப், ஈரோஸ், மற்றும் ஈ.பி.டி.பி ஆகியன குரல் கொடுத்து வந்துள்ளன. ஆயினும் இனப்பிரச்சினை தீர்வு யோசனைகளில் எதுவும் குறிப்பிடப் படவில்லை என்ற கருத்து நிலவுகிறது. மலையக தலைமைத்துவங்கள்தான் இது குறித்து பேச வேண்டுமென சிலர் கூறுகின்றனர். இது பற்றிய உங்கள் கருத்தென்ன?**

பதில்:- விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப நாட்களில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய இலங்கையில் சோஷலிச சமுதாயம் ஒன்றை உருவாக்கும் கருத்தைக் கொண்டிருந்தோம். இலங்கையின் மிகப் பெரிய தொழிலாளி வர்க்கமான மலையக மக்கள் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே பாலமாக செயற்பட முடியும், மூல விசையாக செயற்பட முடியும் என நாம் திடமாக நம்பினோம்.

ஆனால் காலவோட்டத்தில் பிரச்சனைகள் பாரியளவில் மாற்றமடைந்தன. புதிய யதார்த்தங்களை உள்வாங்க வேண்டியிருந்தது. தமிழ் பேசும் மக்கள் என்ற சொற் பதத்தினுள் அடங்கும் அனைத்து சமூகங்கள் மத்தியிலும் தனித்துவங்கள் தொடர்பானதும், பிரதேச சமூக பொருளாதார நிலைமைகள் சார்ந்ததுமான கோரிக்கைகள் மேலெழுந்தன. இத்தகைய சூழ்நிலையில் ஒவ்வொரு சமூகப்பிரிவினரதும் அபிலாசைகள் ஜனநாயகபூர்வமாக பரஸ்பர நட்புறவுடன் அணுகப்பட வேண்டியிருந்தது. ஐக்கிய இலங்கைக்குள் மலையக மக்கள் தனித்துவமான ஒரு சமூகப்பிரிவினர். கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, நிலம் தொடர்பான அவர்களின் [illegible]சைகள் தொடர்பில் மலையகத்தில் இருந்து எழும் கோரிக்கைகளை நாம் ஆதரிப்போம். அந்த வகையில் தற்போது மலையக கல்விமான்களாலும், மலையக தலைவர்களாலும் முன்வைக்கப்பட்டு வரும் கருத்துக்கள் எமக்கு ஆர்வமூட்டுகின்றன. இதேபோல் முஸ்லீம் மக்கள் தமது தனித்துவத்தை கோரி நிற்கிறார்கள். மத்தியில் இருந்து தொலைவில் வாழும் சிங்கள மக்களினதும் அரசியல் அதிகாரப் பகிர்வு கோரிக்கைகளையும் நாம் கருத்திற்கெடுத்தாக வேண்டும். மொதத்தில் இலங்கை பல இனங்களின தேசமாக நிர்மாணிக்கப்பட வேண்டும்.

**கேள்வி:- நாட்டிலுள்ள அனைத்து தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வு குறித்த யோசனைகள் ஏதேனும் முன் வைக்கப் பட்டுள்ளதா?**

பதில்:- அனைத்து தமிழ் பேசும் மக்களுக்குமான தீர்வொன்றை ஒரேபார்வையில் முன்வைக்கவில்லை. முன்வைக்க முடியாது எனினும் இலங்கையின் தேசிய சமூகங்கள் தொடர்பாக மத்தியிலும், பிராந்தியத்திலும் எத்தகைய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதையும் சகல தேசிய சமூகங்களினதும் நலன்களை கருத்திற்கெடுத்ததாக தேர்தல் தொகுதி முறைகளில் எத்தகைய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது பற்றியும் ஈரவை பாராளுமன்றம் பற்றியும், அந்த இரண்டாவது அவையில் பெரும்பான்மை தேசிய சமூகம் தவிர்ந்த ஏனைய தேசிய சமூகங்களிற்கு 40 வீதத்திற்கு குறையாத பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் [illegible] வொரு தேசிய சமூகத்தையும் பாதிக்கும் விதமாக ஏதாவதொரு பிரேரணை கொண்டுவரப்பட்டால் அதனை சம்பந்தப்பட்ட தேசிய சமூகத்தைச் சேர்ந்த 50 வீதத்திற்கு குறையாதவர்கள் நிராகரித்தால் அது இரண்டாவது அவைக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளோம்.

**கேள்வி:- கட்டுநாயக்கா விமானப் படைதளம் மீதான தாக்குதல் சம்பவத்தின பின்னர் சமாதான பேச்சுக்களில் அக்கறை கொள்ளாமல் புலிகளை அழித்த பின்னரே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென ஜே.வ.பி கூறியுள்ளமை தொடர்பாக உங்களது கருத்தென்ன?**

பதில்:- ஒன்றன் பின் ஒன்றாக என் பதில் எமக்கு உடன்பாடில்லை. பயங்கரவாதத்தையும் தமிழ் மக்களின் பிரச்சனைகளையும் வேறு வேறாக அணுக வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சனைகளை புலிகளின் பயங்கரவாதத்துடன், வன்முறைகளுடன் போட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது. தமிழ் ஜனநாயக சக்திகளின் கருத்துக்கள் செவிமடுக்கப்பட வேண்டும். பயங்கரவாதத்தை தனிமைப்படுத்துவதாக இருந்தாலும், தோற்கச் செய்வதாக இருந்தாலும் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகள் என்ற கருவி முக்கியமானது. அதனை திறந்த மனதுடன் அணுகுவதனூடாகவே இவற்றை தோற்கடிக்க முடியும். பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளும் அரசியல் அதிகாரப் பகிர்வு நடவடிக்கைகளும் சமாந்தரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். ஏனெனில், தமிழ் மக்கள் கடந்த மூன்று தசாப்தங்களாக பேரழிவுகளையும், துன்பங்களையும் அனுபவித்து வருகின்றார்கள் எக்காரணம் கொண்டும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கான நடவடிக்கைகளை ஒத்திப்போடுவது நீதியானதாக இருக்காது.

**கேள்வி:- ஒவ்வொரு சமாதான உடன்படிக்கைகளையும் புலிகள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் புலிகள் இயக்கத்தை தவிர்த்துவிட்டு சமாதான பேச்சுக்களை முன்னெடுப்பது சாத்தியமான காரியமென நீங்கள் நினைக்கிறீர்களா?**

பதில்:- ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். புலிகள் பிரிவினையைத் தவிர வேறொன்றையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுவிட்டு பின்னர் அதனை நிராகரித்து இந்திய அமைதிகாப்பு படையுடன் போர் புரியவில்லையா?

1990களின் நடுப்பகுதியில் சமாதானப் பேச்சுவார்த்தை யுத்த நிறுத்தம் என்று ஆரம்பித்துவிட்டு பின்னர் திருமலையில் பாரிய யுத்த நிறுத்த மீறலை செய்து முழுமையான போரை நோக்கி செல்லவில்லையா?

ஒஸ்லோவில் சமஷ்டி முறையை ஏற்றுக் கோண்டுவிட்டு பின்னர் அதனை மறுதலிக்கவில்லையா?


இந்த நாடு, இந்தப் பிராந்தியம் இந்த யதார்த்தங்களை புலிகள் புரிந்து கொள்ளவில்லை. புரிந்துகொள்ள முயலவுமில்லை. எனவே புலிகள் இயக்கத்தின் முடிவிற்காக காத்திருப்பது என்பது தமிழ் மக்களின் அழிவு வரை காத்திருப்பதாகவே அமையும் என்பது எம் கருத்து.

நன்றி:- தினகரன் வாரமஞ்சரி (08-04-2007)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இறுதி யுத்தத்திற்கு" நிதியுதவி செய்தல்

## புலம் பெயர்ந்த தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல் களும் பலாத்கார பணப்பறிப்பும்.




அங்கே (இலங்கையில்) எனக்கொரு சகோதரன இருக்கின்றார். அவர் பாதிக்கப்படுவதை நான் விரும்பவில்லை. அவர்கள் என்ன கேட்கிறார்களோ நான் அதை செய்யப்போகிறேன்.

— டொரன்டோவில் புலிகள் இயக்கத்தினால் பணம் தரும்படி கேட்கப்பட்ட ஒரு பெண்.

அனேகமான தமிழர்கள் தாம் விரும்பியே புலிகள் இயக்கத்திற்கான நிதி பங்களிப்பினை செய்தாலும், ஏனைய பலர் அவர்களுக்கு வேறு வழியில்லை என்ற காரணத்தினால் அதைச் செய்ய நேரிடுகின்றது. புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளை அவர்கள் ஆதரிக்காவிட்டாலும் கூட. எந்த அச்சம் புலிகள் இயக்கத்தை விமர்சிப்பவர்களை மௌனமாக்குகின்றதோ, அதே அச்சம்தான், புலம் பெயர் சமூகத்தின் அங்கத்தவர்களை புலிகள் இயக்கத்திற்கான நிதி ஆதரவை வழங்க நிர்ப்பந்திக்கின்றது.

2005ம் ஆண்டு பிற்பகுதியில் இலங்கை படையினருக்கு எதிராக புலிகள் இயக்கம் தனது தாக்குதல்களை அதிகரித்ததுடன் இரு பக்கத்தினராலும் மனித உரிமை மீறல்கள் அதிகரித்த சூழ்நிலை உருவானது. இக்கால கட்டத்தில் கனடா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பாவில் உள்ள ஏனைய நாடுகளில் வாழும் புலம்பெயர் வாழ் தமிழர்களிடையே, புலிகள் இயக்கமானது தனது பாரிய நிதி சேகரிப்பு நடவடிக்கையை முடுக்கி விட்டது. தமிழர்களுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்கள் மற்றும் தமிழர்கள் வாழும் பகுதிகளில், வீடு வீடாக சென்ற புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள். பெரும்பாலும் நேரடியான அச்சுறுத்தல்கள் மற்றும் நெருக்குவாரமளித்தல் மற்றும் பலாத்காரபடுத்தல் போன்றவற்றுக்கு ஊடாகவே கணிசமானதொரு தொகையை தங்களுக்கு தருவதற்கு இணங்குமாறு அவர்களை வற்புறுத்தினர்.

டொரன்டோவில் ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பமும் 2,500 முதல் 5,000 கனெடிய டொலர் வரையான தொகையை கட்டாயம் செலுத்த வேண்டும் என கேட்கப்பட்டதோடு சில குடும்பங்கள் 10,000 கனேடிய டொலர் போன்ற பெரிய தொகையினை செலுத்த வேண்டுமெனவும் கேட்கப்பட்டனர். வர்த்தக உரிமையாளர்கள் 25,000 கனேடிய டொலரில் இருந்து 100,000 கனேடிய டொலருக்கு இடைப்பட்ட ஒரு தொகையை வழங்க வேண்டும் என கேட்கப்பட்டனர். ஒரு மில்லியன் கனேடிய டொலர்களை கொடுக்க வேண்டும் என ஒரு இந்துக் கோயிலிடம் கேட்கப்பட்டுள்ளது.

இலண்டனில் அனேகமான தனிப்பட்ட குடும்பங்கள 2,000 பவுண்டுகள் கொடுக்க வேண்டும் என கேட்கபட்டுள்ளதோ, வர்த்தக நிறுவனங்கள் 10,000 பவுண்டில் இருந்து ஒரு லட்சம் பவுண்டு வரை கொடுக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளனர். பிரான்ஸ், நோர்வே ஆகிய இடங்களில் வாம் தமிழ் சமூகத்தினிடமிருந்தும் இதெ மாதிரியான தொகைகள் கோரப்பட்டதக கூறப்படுகிறது. இந்த நிதியானது "கடனாக" பெறப்படுகின்றது என்றும் அது பின்னர் வட்டியுடன் திருப்பி தரப்படும் என்றும் சில வேளைகளில் ஒருசில தனி நபர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் சொல்லப்பட்டுள்ளது. ஏனையவர்கள் முழுமையான பங்களிப்பாகவே அந் நிதியை கொடுக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நிதி கேட்டு வந்த தனிநபர்கள், தாங்கள் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள் என்றே சில வேலைகளில் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டனர். ஏனைய சந்தர்ப்பங்களில், புலிகள் இயக்கத்தின் முன்னணி அமைப்புக்கள் என பரவலாக நம்பப்பட்ட உலகத் தமிழர் இயக்கம் அல்லது பிரித்தானிய தமிழ்ச் சங்கம் என்பவற்றில் இருந்து தாம் வருவதாக அவர்கள் கூறினர். நிதி சேகரிப்பதற்காக தாங்கள் "பிரபாகரனால் (புலிகள் இயக்கத்தின் அதி உயர் தலைவர்) அனுப்பப்பட்டு இருக்கிறோம்" என தங்களின் வீடுகளுக்கு வந்தவர்கள் நேரடியாகவே சொன்னார்கள், எனறு சில குடும்பத்தினர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தனர். நித சேகரிப்பாளர்கள் அனேகமாக இருவர் இருவராகவே செல்வது வழமை. சிலவேளைகளில் நிதி கேட்டு அணுகியவர்கள் மூன்று அல்லது நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட குழுவினராக இருந்தனர், என மேலும் சிலர் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தனர்.

இந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பாக, புலிகள் இயக்கத்தினர் பல்வேறு விதமாக விளக்கங்களை கொடுத்தனர். அநேகமாக "இறுதி யுத்தத்திற்காக" என்று கூறியே நிதி கேட்கப்பட்டுள்ளது என எமக்கு தெரிவிக்கப்பட்டது. இரண்டு மாத காலத்திற்குள் வடக்கு கிழக்கில் இருந்து இலங்கை இராணுவத்தினர் அனைவரையும் துரத்தி அடிப்பதற்கு புலிகள் இயக்கம் திட்டமொன்றை வைத்துள்ளனர். என்றும், அந்த காலகட்டத்தோடு யுத்தம் முடிவுக்கு வந்துவிடும் என்றே புலிகள் இயக்கம் தமிழ்க் குடும்பங்களிடமும் வர்த்தக உரிமையாளர்களிடம் கூறியது. ஏனைய பலரிடம், தாங்கள் தமிழீழ பிரகடனம் செய்யப் போகிறோம். ஆகவே எமது திறைசேரிக்கு பணம் தேவைப்படுகிறது என்றும் அவர்கள் கூறியுள்ளனர். இன்னும் சில இடங்களில் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்கு, தாங்கள் ஐக்கிய நாடுகள் சபையிடம் (UN) தமிழீழத்திற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்காக, இப் பெருந் தொகை நிதி தங்களுக்கு தேவைப்படுவதாகவும் அதனடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபை புதிய தமிழீழ அரசிற்கான நிதியை வழங்கும் எனவும் கூறியுள்ளனர்.

டொரன்டோவில் உள்ள ஒரு குடும்பத்தின் வீட்டிற்கு, ஒரு வாரத்திற்குள் மூன்று முறை அவர்கள் சென்றுள்ளனர். முதல் முறை வரும் பொழுது, வந்த மூவரும் தாங்கள் உலகத் தமிழர் இயக்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வருவதாக கூறியுள்ளனர்.

தாங்கள் நிதி சேகரிப்பிற்காக பிரபாகரனால் அனுப்பப்பட்டிருப்பதாக அவர்கள் கூறினர். எங்களுடைய முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் பல தகவல்கள் உட்பட பல்வேறு ஆவணங்கள் தங்களிடம் இருப்பதாக அவர்கள் கூறினார்கள். இந்த நிதி எதற்காக சேகரிக்கிறீர்கள் என்று அவர்களிடம் கேட்டபொழுது "நாங்கள் எங்கள் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் இலங்கை இராணுவத்தை வெளியேற்றுவதற்கு இன்னும் இரண்டு மாதங்களே உள்ளன. சகல திட்டங்களும் தயாரிக்கப்பட்டு விட்டன. நாங்கள் இறுதியான ஆதரவையே தமிழ் மக்களிடம் இருந்து இப்போது கேட்கின்றோம்.

அக் குடும்பத்தினரிடம் 5,000 கனேடிய டொலர்கள் தரும்படி அங்குவந்த நபர்கள் கேட்டனர். "அவர்கள் எம்மிடம் பணத்தைக் கேட்கின்ற பொழுது தங்களிடம் இருந்த கோப்பு (file) ஒன்றை பார்த்தனர். நாங்கள் எவ்வளவு காலம் அந்த வீட்டில் வசிக்கின்றோம் என்று கேட்டனர். நாங்கள் அதைக் கூறியதும் அவர்கள் 5,000 டொலர்கள் எனக் கூறினர்".

அக் குடும்பத்தினர் அந்த பணத்தை கொடுக்க மறுத்ததும், அந்த நபர்கள் மீண்டும் இரண்டு முறை அவர்களின் வீட்டுக்கு வந்தனர். ஒ முறை அவர்கள் வந்த பொழுது தாங்கள் "இறுதி யுத்தத்திற்காகவே" இந்த நிதியை சேகரிப்பதாக திரும்பவும் கூறினர். 5,000 டொலர்களை வழங்குவதற்காக. 2006 பெப்ரவரி மாதம் வரை அக்குடும்பத்திற்கு கால அவகாசம் தரலாம் என அவர்கள் கூறினர். ஆனாலும் அக்குடும்பம் அதற்கு மறுத்து விட்டது.

25 வருட காலத்திற்கு மேலாக இலண்டனில் வசிக்கும் ஒரு தமிழர், 2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள் தமது வீட்டிற்கு வந்த சம்பவத்தை எமக்கு விபரித்தார்.

"நாங்கள் இன்று இந்தப் பகுதியிலேதான் நிற்கிறோம். இங்குள்ள ஒவ்வொருவரிடமும் இருந்து பணம் சேர்க்கும்படி வன்னியிலே இருக்கும் எமது தலைவர் கூறியுள்ளார்." என அவர்கள் கூறினர். பின்னர் அவர்கள் 2,000 பவுண்டுகள் தரும்படி கேட்டார்கள். "நீங்கள் இங்கே நிதி பங்களிப்பு செய்தால் நீங்கள் இலங்கைக்கு போய் உங்கள் குடும்பத்தினரைப் பார்க்கலாம். நாங்கள் உங்களுக்கு ஒரு அடையாள (PIN) இலக்கத்தை தருவோம் நீங்கள் யாழ்ப்பாணத்தில் சுதந்திரமாக நடமாடுவதற்கு அந்த இலக்கம் வகைசெய்யும். இல்லாவிட்டால் உங்களுக்கு பிரச்சனை வரும். நீங்கள் இங்கே நிதி கொடுக்காவிட்டால், இலங்கைக்கு செல்லும்போது இரண்டு, மூன்று மடங்காக அதை நீங்கள் கொடுக்க வேண்டி வரும்."

அந்த அச்சுறுத்தல் காரணமாக தான் கவலையடைந்திருப்பதாக அவர் கூறினார். "எனது பெற்றோரில் ஒருவரும் எனது சகோதர சகோதரிகளும் இலங்கையில் இருக்கின்றார்கள். அவர்கள் எனது பிள்ளைகளை பார்க்க வேண்டும் என நான் விரும்புகின்றேன்."

அந் நிலைமை தொடர்பாக அவர் கவலையடைந்தாலும் தான் தொழில் இல்லாமையால் இருப்பதாகவும் அதன் காரணமாக தன்னிடம் தருவதற்கு பணம் இல்லை என்றும் அவர் விளக்கியதோ, நிதி வழங்க மறுக்கவும் முயற்சித்தார். ஆனால் புலிகள் இயக்கம் தன் மீது தொடர்ச்சியாக அழுத்தங்களை இடுவதாக அவர் கூறினார். "நீர் இலங்கையை சேர்ந்தவர் என்றால், நீர் கட்டாயம் தந்துதான் ஆகவேண்டும். அது உமது பொறுப்பு. உமக்கு உமது குடும்பத்தை கவனிக்க வேண்டும் என்றால், அது உமது பிரச்சினை. ஆனால் நாங்கள் விடுதலைப் போராட்டத்திற்காகவே உம்மை பங்களிக்கச் சொல்கின்றோம். என அவர்கள் கூறினர்". இறுதியா தான் 2,000 பவுண்டுகள் வழங்குவேன் என உறுதிகூறி, அதற்கான ஒப்பந்தம் ஒன்றில் அவர் கையொப்பம் இட்டு இணக்கம் தெரிவிக்கும்வரை, ஒன்றரை மணி நேரத்திற்கு மேலாக புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள் அங்கு அமர்ந்திருந்தனர். இலங்கையில் அவரின் குடும்பத்தாரின் முகவரி மற்றும் அவரின் வருமானம் உட்பட பல தகவல்களை கோருகின்ற படிவம் ஒன்றையும் அவர் நிரப்பினார். "அவர்கள், தாங்கள் இணக்கம் தெரிவிக்கும்வரை, அல்லது பிந்தி திகதி இடப்பட்ட ஒரு காசோலையை பெற்றுக்கொள்ளும்வரை, அங்கிருந்து செல்லமாட்டார்கள். மணிக்கணக்காக குந்தியிருந்து கதைத்துக் கொண்டே இருப்பார்கள், என்று நான் ஏனைய பலிடம் இருந்து கேள்விப்பட்டிருக்கிறேன்." என்றும் அவர் எம்மிடம் கூறினார்.

2005ம் ஆண்டு நவம்பர் மாதத்தில், தான் வியாபாரம் செய்கின்ற மாவட்டத்தில் உள்ள உள்ளூர் தமிழக் கடை உரிமையாளர்களை இரகசியமான ஒரு இடத்திற்கு கூட்டம் ஒன்றிற்காக அழைத்துச் செல்வதற்கென்று வாகனங்கள் வந்ததாக, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் இலண்டனில் உள்ள ஒரு வர்த்தகர் தெரிவித்தார். அன்றைய தினம் தன்னுடைய கடைக்கு வந்த புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள். தாங்கள் சகல வர்த்தகர்களுடனும் கதைக்க வேண்டும் எனவும் தன்னை அழைத்துச் செல்வதற்கு 30 அல்லது 60 நிமிடத்திற்குள் தாங்கள் திரும்பி வருவதாகவும் கூறிச் சென்றனர். தனக்கு நேரம் இல்லை என்று கூறி அவர் செல்வதற்கு மறுத்து விட்டார். ஆனால் தனது மாவட்டத்தில் உள்ள 25 வர்த்தக உரிமையாளர்கள் பங்குபற்றிய கூட்டத்தைப் பறறி அவர் வேறு ஒருவரிடம் இருந்து தெரிந்து கொண்டார். பிரிட்டிஷ் தமிழ்ச்சங்கம் மற்றும் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள், அக் கூட்டத்தில் பேசியதாகவும அவர்கள் "இறுதி போருக்கு" வர்த்தக உரிமையாளர்கள் நிதி வழங்க வேண்டும் என்று கோரியதாகவும், அதன்படி பல கடை உரிமையாளர்கள் அக்கூட்டத்தில் வைத்து ஒரு குறிப்பிட்ட தொகையை தாங்கள் வழங்குவதற்கு ஒப்புக்கொண்டு ஒப்பந்தங்களில் கையொபபமிட்டதாகவும் அவர் அறிந்து கொண்டார். அனேகமான மக்கள் பணத்தை வழங்குகின்றார்கள். சிலர் ஒரு இலட்சம் பவுண்டுகள் கூட கொடுக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு கொடுக்க மறுக்கின்ற பட்சத்தில், "அப்படியானால் நீங்கள் இனி இலங்கைக்கு திரும்பி போக மாட்டீர்கள்" என அவர்களுக்கு கூறப்படுகின்றது.

அச்சந்திப்பு நடந்து அதிக நாட்கள் செல்வதற்கு முன்னரே அவரின் கடைக்கு வந்த மூன்று நபர்கள் அவரிடம் 50,000 பவுண்டுகள் தர வேண்டும் எனக் கேட்டனர். "எல்லாக் கடைக்காரர்களிடமும் தாங்கள் 50,000 பவுண்டுகள் தரவேண்டும் எனக் கேட்டுள்ளொம் என அவர்கள் கூறினர். அவ்வளவு தொகையை நான் உங்களுக்குத் தந்தால் எனது கடையை மூடிவிட வேண்டியதுதான் என நான் அவர்களிடம் கூறினேன். அப்படியானால் என்னால் அதிக பட்சம் எவ்வளவு தொகையை தர முடியும் என அவர்கள் கேட்டனர். நான் என்னிடம் பணம் இல்லை என்று அவர்களிடம் கூறினேன். ஆனால் அவர்கள் தாம் இன்னும் ஒரு மாதத்தின் பின் திரும்பி வருவதாக கூறிச் சென்றார்கள். தான் பொருளாதாரக் காரணங்களுக்காகவும் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் உட்பட சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகள் பற்றியெல்லாம் புலிகள் இயக்கத்திற்குள் உள்ள தனது உறவினர் ஒருவர் ஊடாக அறிந்துள்ளதாலும் புலிகளுக்கு நிதி வழங்க தான் விரும்பவில்லை என அவர் மனித உரிமை கண்காணிப்புக் குழுவிற்கு தெரிவித்தார்.

பல வாரங்கள் கழிந்த பின்னர் முதல்முறை வந்த அதே மூன்று நபர்கள் திரும்பவும் வந்ததாக அக்கடை உரிமையாளர்கள் எம்மிடம் கூறினார். "நாங்கள் புலிகள் இயக்கத்தில் இருந்து வருகின்றோம். நாங்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டு போகவே வந்தோம், என அவர்கள் என்னிடம் கூறினர்." கடை உரிமையாளர் தன்னிடம், தருவதற்கு பணம் ஏதும் இல்லை என மீண்டும் கூறினார். அவர் தான் பொலிசாரை அழைக்கப் போவதாக அச்சுறுத்திய பின்னரே அவர்கள் அங்கிருந்து நகர்ந்தனர்.

2005ம் ஆண்டு டிசம்பரில் புலிகள் இயக்கத்தின் நிதி சேகரிக்கும் நடவடிக்கையானது டொரன்டோவில் மிகத்தீவிரப்படுத்தப்பட்டதாக பல்வேறு தகவல்கள் தெரிவிக்கின்றன. தனது தொழில் காரணமாக அதிக எண்ணிக்கையான தமிழர்களோடு தொடர்பு கொண்டுள்ள ஒரு தமிழர் எம்மிடம் கூறும் பொழுது, தனக்குத் தெரிந்த 70, 80 பேர்களிடம் பணம் கேட்கப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் பணம் கொடுத்து உள்ளனர் என்பதும் தனக்குத் தெரியும், என்றும் கூறினார். அவர்களின் நிதி திரட்டும் செயற்பாடு அதிகரித்து இருக்கிறதா என அவரிடம் கேட்டபொழுது, நிச்சயமாக, முன்னர் இவ்வளவு அதிகமானவர்களிடம் அவர்கள் சென்று பணம் கட்கவில்லை. ஆனால் இப்பொழுது எல்லோரும் அதைப்பற்றி பேசுகின்றனர் 2,000 — 3,000 கனேடிய டொலர்களை வழங்கிய அதிகமான நநபர்களுடன் நான் கதைத் இருக்கிறேன். அவர்கள் (புலிகள் இயக்கம்) பெருந்தொகையான பணத்தை சேகரிக்கிறார்கள். அவர்களுக்கு நிறைய பணம் கிடைக்கின்றது.

டொரன்டோவில் உள்ள ஒரு பெண் எம்மிடம் கூறும் பொழுது, "எனது அக்கம் பக்கத்தில் அறு குடும்பங்கள் இருக்கின்றன. அவர்கள் எல்லோருடனும் கதைத்தேன். அவர்கள் எல்லோரினதும் வீட்டிற்கும் வந்துள்ளனர்." ஒவ்வொரு குடும்பத்தினரினதும் வருமானம் மற்றும் சொத்துக்களின் அடிப்படையிலேயே அக்குடும்பங்களிடம் கேட்கப்படும் தொகை வித்தியாசப்படுவதாக அவர் நம்புகின்றார். தமது வீட்டு அடையமானத் (Mortgage) தொகையை செலுத்தி முடித்த குடும்பம் ஒன்றிடம் 10,000 கனேடிய டொலர்கள் கேட்கப்பட்ட அதேவேளை சிறிய வீடு ஒன்றில் வாழ்ந்த இன்னும் ஒரு குடும்பத்தினிடம் 2,000 கனேடிய டொலர்கள் கேட்கப்பட்டுள்ளது.

பல ஆயிரம் டொர்களை வழங்க வேண்டும் என தாங்கள் மிகவும் அழுத்தப்பட்டதாக, டொரன்டோவில் வாழும் இன்னும் ஒரு குடும்பம் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறியது. தாங்கள் பணம் தரமாட்டோம் என அக்குடும்பம் திரும்பத் திரும்ப கூறியதன் பின்ன. புலிகள் இயக்கத்தினர் அவர்களிடம் ஒரு படிவத்தைக் கொடுத்து "அப்படியானால் நீங்கள் இப்படிவத்தை நிரப்பி, புலிகள் இயக்கம் செய்பவற்றை நீங்கள் நம்பவில்லை என எழுதித் தரமுடியுமா? எனக் கேட்டார்கள். அதற்கும் கணவன் மறுத்து விட்டார்." அதன் பின்னர் அவர்களே அவ் விண்ணப்ப படித்தை எழுதி அதை பின்புறம் திருப்பி அதில் என்னை கையொப்பம் இடும்படி கேட்டனர். என்று அவர் தெரிவித்தார்.

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவிக்கப்பட்ட இன்னுமொ சம்பவத்தில், புலிகள் இயக்கத்திற்கு பணம் கொடுக்க மறுத்த டொரன்டோவில் வாழும் ஒரு குடும்பத்தினரின் வீடு சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டது. என்று கூறப்பட்டது. குற்றவாளிகள் யார் என்பதை பொலிசாரால் இன்னும் இனங்காண முடியாது இருக்கின்ற அதேவேளை, இதற்கு புலிகள் இயக்கமே பொறுப்பு என்று அக்குடும்பத்தினர் நம்புகின்றனர். அதே முகவரியில் தொடர்ந்து தங்கியிருப்பதற்கு அச்சம் அடைந்ததனால் அக் குடும்பம் வேறு ஒரு வீட்டிற்கு இடம் மாறி உள்ளதாக சொல்லப்படுகின்றது.

2005 ஒக்டோபரில், டொரன்டோ பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவரிடம் வந்த புலிகள் இயக்கத்தினர் 8,000 கனேடிய டொலர்கள் செலுத்தும்படி கேட்டனர். தன்னுடைய வியாபாரத்தில் தான் பிரச்சனைக்கு முகம் கொடுத்து இருப்பதாகவும் தன்னிடம் தருவதற்கு பணம் இல்லை என்றும் அவர் கூறினார். மீண்டும் சில வாரங்களின் பின்னர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நான்கு நபர்கள் அவ் வர்த்தகரிடம் வந்தனர். இந்த முறை அவர்கள் 20,000 கனேடிய டொலர்களை அவர் தர வேண்டும் எனக் கேட்டனர். அவர்களுக்கு பங்களிப்புச் செய்வதற்கு தன்னிடம் பணம் ஏதும் இல்லையென அவர் மீண்டும் அவர்களிடம் சொன்னார். "ஏனையவர்களுக்கும் பணம் தருவதற்கான வசதி இல்லைதான், ஆனால் அவர்கள் எப்படியாவது ஒரு வழியை கண்டுபிடிக்கிறார்கள். இது உங்களுடைய கடமை. இங்கிருந்து நீங்கள் உங்கள் சமூகத்திற்கு உதவி செய்ய வேண்டும். இது திரு. பிரபாகரனின் கோரிக்கை. யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும்." என்றனர். தான் தொடர்ச்சியாக பணம் தருவதற்கு மறுத்த பொழுது, "நீர் பங்களிப்பு செய்ய விரும்பாவிட்டால், நீர் விரும்பவில்லை என நேரடியாகச் சொல்லும்" என புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சொன்னதாக அவ் வர்த்தகர் எம்மிடம் கூறினார்.

பொருளாதார ரீதியான நிலைமை காரணமாகவே தன்னால் பங்களிப்பு செய்ய முடியாமல் இருப்பதாக அவ் வர்த்தகர் மீண்டும் சொன்னார். அதற்கு புலிகள் இயக்கத்தினர் இறுதியாக, "சரி எங்களுக்கு உதவி செய்ய நீர் விரும்பவில்லை என்று தாம் புரிந்து கொள்கின்றோம். ஆனால் விரைவில் நீர் ஒரு பாடம் படிப்பீர். உமது மனைவி பிள்ளைகள் பற்றி நீர் கவலைப்படவில்லை என்றே நாம் நினைக்கின்றோம்." அவ் வர்த்தகர் தனது மனைவி பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பாக அதிக கவலையடைந்து உள்ளார். என மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு அவரிடம் கேட்ட பொழுது "ஆம் நிச்சயமாக" என அவர் தெரிவித்தார்.

தொடரும்..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் குடாநாட்டு மக்களின் ஏக்கம்

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் முகமாலையிலும், அல்லைப்பிட்டியிலும் புலிகள் ஊடுருவித் தாக்கியதை தொடர்ந்து ஏ9 பாதை மூடப்பட்டது, யாழ் மாவட்டம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனால் யாழ் குடாநாட்டுமக்கள் தொழில் வாய்ப்பை இழந்தனர், நாட்டின் இதர பகுதிகளுக்கான போக்குவரத்தை இழந்தனர், போக்குவரத்து தடைப்பட்டமையால் அன்றாடம் தேவைப்படும் உணவுப்பொருட்கள் மற்றும் அத்தியாவசிய பாவனைப்பொருட்களை பெறமுடியாது மக்கள் திண்டாடினர்.


இத்தகைய நெருக்கடி நிலையில் யாழ் மாவட்ட வர்த்தகர்கள், ஐ.நா நிறுவனங்கள், சர்வதேச செஞ்சிலுவை சங்கம் என்பன யாழ் குடாநாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் கடல்வழி போக்குவரத்து வசதியை ஏற்படுத்தவும் கொழும்பிலிருந்து அத்தியாவசிய பண்டங்களை எடுத்துவருவதற்கும் தயாராக இருந்த போதும் புலிகள் அதற்கு முட்டுக்கட்டை போட்டனர். தடுத்தனர்.

மக்களின் அவலநிலையை போக்குவதற்கு முன்முயற்சி எடுக்க வேண்டிய புலிகள் தமக்கு பொன்முட்டையிடும் வாத்தாக இருந்த ஏ9 பாதையை திறப்பதற்கு குடாநாட்டு மக்களின் அவலங்களை துருப்பு சீட்டாக உபயோகித்தனர்.

இதன் காரணமாக ஏ9 பாதை திறக்கப்பட்டாலே யாழ்குடா நாட்டில் இயல்புநிலை திரும்பும் என நிறுவ முற்பட்டனர். இதனை புலிகள் தமக்கு சார்பான ஊடகங்கள் அமைப்புக்கள் வாயிலாக இதர ஊடகங்களையும், நிறுவனங்களையும் நம்பச் செய்தனர். தமது பினாமி அமைப்புக்கள் வாயிலாக அறிக்கைகளை வெளியிட்டு இதர நிறுவனங்களையும் இதுபோன்ற அறிக்கைகளை வெளியிட நிர்ப்பந்தித்தனர்.

புலிகளின் அச்சுறுத்தல்கள், தாக்குதல்களுக்கு மத்தியிலும் அரசாங்க அதிபரும், இராணுவத்தினரும் எடுத்த நடவடிக்கைகளே யாழ் குடாநாட்டு மக்கள் உயிரை தக்கவைத்துக்கொள்ளவும், மருத்துவத் தேவைகளுக்காகவும் இதர அத்தியாவசிய தேவைகளுக்காகவும் வெளியிடங்களுக்கு சென்றுவரவும் பெரிதும் உதவியது.

| 2007 | கொலை | கடத்தல் | கைதானவர்கள் காணாமல் போனவர்கள் | சரணடைந்தவர்கள் |
|---|---|---|---|---|
| தை | 21 | 10 | 26 | 12 |
| மாசி | 19 | 06 | 21 | 06 |
| பங்குனி | 30 | 22 | 22 | 06 |
| மொத்தம் | 70 | 38 | 69 | 24 |



போக்குவரதது ஏற்பாடுகளில் கடற்படையினரின் பங்களிப்பும் பாரியதாகும்.

யாழ் குடாநாட்டில் ஊரடங்கு உதரவு படிப்படியாக தளர்த்தப்பட்டு குடாநாட்டு மக்கள் தமக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலை தோன்றியுள்ளது. போக்குவரத்து நெருக்கடிகள் முற்றாக தீர்ந்துவிடாதபோதும் தொடர்ச்சியாக இடம பெறும் கப்பல் சேவை பெருமளவு மக்கள பயணம் மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளது.

குடாநாட்டு விவசாயிகளின் விளை பொருட்களை தெற்கிற்கு எடுத்துச்சென்று சந்தைப்படுத்துவதற்கும் குடாநாட்டில் பெருமளவு மக்களின் ஜீவனோபாயத்திற்கு தேவையான வேலைவாய்ப்பை தேடித்தரும் தொழிற்துறைகளுக்கு தேவையான மூலப்பொருட்களை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்குமான ஏற்பாடுகள் குடாநாட்டின் உடனடித் தேவையாகும். கட்டுமானத் தொழிற்துறைக்கு தேவையான சீமெந்து, கம்பிவகைகள், கூரைத்தகடுகள் மற்றும் கட்டிடப் பொருட்களும், விவசாயிகள், கால்நடைவளர்ப்போருக்கு தேவையான உரவகைகள், கிருமிநாசினிகள் கோழித்தீன் மற்றும் மாட்டு தீவனம் என்பன தடையின்றி கிடைத்தாலே பெரும்பாலான மக்களின் ஜீவனோபாயத்திற்கு வழிபிறக்கும்.

யாழ் குடாநாட்டு மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் படிப்படியான முன்னேற்றம் இருப்பினும் தினமும் இடம்பெறும் படுகொலைகள், கடத்தல்கள் மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாயுள்ளன. நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கை அரசுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை இன்னமும் அமுலில் உள்ள போதும் யாழ் குடாநாட்டில் படுகொலைகளும் கடத்தல்களும் காணாமற் போவதும் தொடர்வது மட்டுமல்ல நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது.

யாழ்குடா நாட்டில் இவ்வருடம் கடந்த மூன்று மாதங்களிலும் 70பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டபின் அரசியல் நடவடிக்கைளில் ஈடுபடப்போவதாகக் கூறி அரச கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு வந்த புலிகள் நடாத்திய படுகொலகளினதும், வன்முறைகளினதும் நீட்சி மக்களுக்கு இந்த அவல நிலையை தோற்றுவித்துள்ளது. ஆரம்பத்திலேயே புலிகள் நடாத்திய படுகொலைகளை கண்டும் காணாமலும் விட்டதன் விளைவு இன்று படுகொலை கருவிகள் யாருடைய வீட்டுக்கதவையும் தட்டலாம் என்ற நிலையை உருவாக்கி குடாநாட்டு மக்களை பீதியின் நிழலில் வாழும நிலையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ் குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்வு என்பது அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை கிடைக்கச் செய்வது மட்டுமல்ல, தொழில் வாய்ப்பும், போக்குவரத்து வசதிகளும், மருத்துவ வசதிகளும் கிடைப்பது மட்டுமல்ல அச்சுறுத்தலும், மிரட்டலும், படுகொலைகளும் முடிவுக்கு வருவதிலும் அது தங்கியுள்ளது. இயல்பு வாழ்வு குறித்து பேசுபவர்கள் யாராயினும் இந்த விடயத்தையும் கவனத்திலெடுத்தாக வேண்டும்.

# இலங்கையில் பிரச்சனைகளை அணுக வேண்டிய முறை

இலங்கையில் நீடித்து நிலவும் இனப்பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வொன்று எட்டப்பட வேண்டும். மனிதாபிமான நெருக்கடிகளுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும். மனித உரிமை மீறல்கள் ஏற்புடைய பொறிமுறைகள் உருவாக்கி கட்டுப்படுத்தப்பட வேண்டும் என இங்குள்ள ஏகபெரும்பான்மையான மக்களும் இந்தியாவும், சர்வதேச சமூகமும் எதிர்பார்க்கின்றன.

அகதிகளாக இடம் பெயர்ந்தும் வெளி உலகுடன் தொடர்பு கொள்ள முடியாமலும் பற்றாக்குறைகளுடன் அமைதியற்ற வாழ்க்கையும் விரக்தியும் என்ற நிலை நீடித்துச் செல்ல அனுமதித்தால் அது இந்த நாட்டின் சமூக பொருளாதார வாழ்வில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். அதன் சாயல்கள் இப்போதே தெரியத் தொடங்கியுள்ளன.

பெரும்பான்மை நிபுணர் குழுவின் அறிக்கை அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் திஸ்ஸ விதாரண அவர்களின் அறிக்கை 60 ஆண்டுகளுக்கு மேலாக இனப்பிரச்சனை தொடர்பாக அணுகு முறைகள், தீர்வு முயற்சிகள், பின்னடைவுகள் இவற்றையெல்லாம் கருத்திற்கெடுத்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-பத்மநாபா அமைப்பு தனது இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான ஆலோசனைகளை அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு தலைவர் திஸ்ஸ விதாரண அவர்களிடம் சமர்ப்பித்துள்ளது.

இலங்கையில் அதிகாரப்பகிர்வு தொடர்பில் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் பிரதானமாக தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வு உட்பட இலங்கையின் அனைத்து தேசிய சமூகங்களும் சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும், ஐக்கியமாகவும் வாழ்வதற்காக பிரேரணைகளை முன்வைத்துள்ளது.

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அந்த நாட்டு மக்களின் வாழ்வு ஜனநாயக மயப்படுத்தப்படுவதிலேயே தங்கிநிற்கிறது. தனி மனிதனின உரிமைகள், இன சமூகங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதிலும், உறுதிப்படுத்தப்படுவதிலும் அந்த நாட்டின் எதிர்காலம் சுபிட்சமானதாகவோ அல்லாததாகவோ அமைகிறது.

சட்டங்கள் என்பவை இந்த நாட்டு மக்களின் வாழ்வை இலகுபடுத்துவதாக, சுமூகப்படுத்துவதாக அமைய வேண்டும். ஒன்றையொன்று அடக்கி ஒடுக்குவதற்கான, ஒன்றையொன்று விழுங்கிக் கொள்வதற்கான அமைப்பாக அது இருக்க முடியாது பன்முகத்தன்மையும், ஜனநாயகமும், மனித உரிமைகளும் இதன் அடிநாதமாக அமைகின்றன.

மக்களின் வாழ்வை இலகுபடுத்துவதற்கான செயற்பாடுகளில் அக்கறை செலுத்தாதவர்கள் நேர்மையான அரசியல் இராணுவ தலைவர்களாக இருக்க முடியாது.

நாட்டின் முன்னேற்றம் என்பது அந்த நாட்டு மக்களின் முன்னேற்றமே. மக்களை புறத்தொதுக்கிய அவர்களை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாத அவர்களின் வாழ்வை காயடித்து விளையாடுபவர்கள், அதிகார அகங்காரம் கொண்ட மன நோயாளிகளே.

உணவு, உறையுள், தண்ணீர், சுகாதாரம் வேறு உள்ளக கட்டமைப்புக்களுடன் அரசியல் ரீதியான பாரபட்சங்களுக்கு நாம் உள்ளாக்கப்பட வில்லை. நாம் பாரபட்சமாக நடத்தப்படவில்லை. எமது கருத்துக்கள் செவிமடுக்கப்படுகின்றன. நாம் அச்சமின்றி சுதந்திரமாக பாதுகாப்பாக வாழ்கிறோம் என்ற உணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுவதற்கான வழிவகைகளை கண்டறிவதே இன்று முதலும் முக்கியமுமான பணியாகும்.

அரசியல் அதிகார கட்டமைப்புக்களும், நீதி சட்டம் சார்ந்த நிறுவனங்களும். தம்மை பாதுகாக்கும் தமது அபிலாசைகளை கனிவுடன் அணுகும் என்ற எண்ணம் ஏற்படுவதற்கு ஏதுவான இடைவெளியொன்று உருவாக்கப்பட வேண்டும்.

பயங்கரவாத வன்முறை சக்திகளுக்கு அடிப்படை ஆதாரத்தை இல்லாதொழிப்பதற்கு இவையெல்லாம் முன் நிபந்தனையாகின்றன.

மக்களை கருத்திற்கெடுத்து காரியங்கள் ஆற்றப்படும் போதே இந்த சக்திகள் தோற்கடிக்கப்படுகின்றன.

இலங்கையில் வன்முறையும் அராஜகமும், யுத்தமும் நிலவும் காலப்பகுதி என்பது மிகச் சாதாரணமானதல்ல. இலங்கை சுதந்திரம பெற்று 58 ஆண்டுகளில் 30 வருடங்களை இத்தகைய சூழலில் வாழ எமது மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

உலகின் தராதரமான ஜனநாயக, மனித உரிமைகளை உள்ளடக்கிய சமூக பொருளாதார வாழ்வை அனுபவிப்பதற்கு எமது மக்களுக்கு பரிபூரண உரிமை உண்டு.

ஆனால் கடந்த 30 ஆண்டுகளில் இரண்டு தலைமுறைகள் இந்த அற்புதமான சந்தர்ப்பத்தை இழந்து விட்டனர். இது சாதாரணமாக எளிமைப்படுத்தப்பட்டு விடக் கூடிய காலப்பகுதியல்ல.

இலங்கையில் வன்முறை நீடித்து நிலவுகிறது என்பது உண்மையே. வன்முறையாளர்களையும் மக்களையும் பிரித்தறியும் பக்குவம் வேண்டும். இந்த இரண்டு பிரிவினரதும் அபிலாசைகளும் வெவ்வேறானவை. ஒன்றன் பின் ஒன்றாக இவற்றை அணுக முடியாது. பயங்கரவாதம். வன்முறைகளை தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதே வேளை சமாதாந்தரமாக மக்களின் தேசிய நல உரிமைகளுக்கான தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும். பயங்கரவாதத்தை தோற்க செய்வதென்பதும் இதனுடன் இணைந்த செயற்பாடே.

பயங்கரவாதத்தையும் மக்களின் பிரச்சனைகளையும் ஒரு குறுங்கழுத்து போத்தல் வாயினூடாக உள்ளே தள்ளும் மனோபாவம் களையப்பட வேண்டும்.

இரண்டும் சமாந்தரமாக வெவ்வேறு தளங்களில் அணுகப்பட வேண்டும். அதுவே மக்களின் அமைதியான வாழ்விற்கான முதல் காத்திரமான அடிவைப்பாக அமையும.

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் இரத்தினம்பிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org